# அரசியல் அரங்கம்



உவமைக்கவிஞர்

## சுரதா

மணிவாசகர் பதிப்பகம்

அம்மா கணினியகம்

# இசை அரங்கம்

**உவமைக்கவிஞர் சுரதா**

**மணிவாசகர் பதிப்பகம்**
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : மார்ச், 2010

திருவள்ளுவர் ஆண்டு : 2041

**விலை : ரூ. 60.00**

மொத்தப் பக்கங்கள் : 112

அளவு (டெம்மி) 1 x 8

மணிவாசகர் வெளியீட்டு எண் : 1687

முகப்பு அட்டை மற்றும்
பக்க வடிவமைப்பு:
எம்.ஏ. பாலாஜி
அம்மா கணினியகம், சென்னை–17.



நினைவில் வாழும் நிறுவனர்
ச. மெய்யப்பனார்

அண்ணாமலைப்
பல்கலைக் கழக
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.
பல்கலைக் கழகங்கள்
பலவற்றில் அறக் கட்டளைகள்
நிறுவியுள்ளார்.
'வள்ளுவம்' இதழின்
நிறுவன ஆசிரியர்.
குன்றக்குடி அடிகளார்
'தமிழவேள்' என்றும்,
தருமபுரம் ஆதீனத் தலைவர்
'செந்தமிழ்க் காவலர்' என்றும்
விருதுகள் வழங்கிச்
சிறப்பித்துள்ளனர்.
'பதிப்புச் செம்மல்' என
அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

நூல்கள் கிடைக்குமிடம்:
மணிவாசகர் நூலகம்
12–B, மேலச் சன்னதி,
சிதம்பரம் – 608001.
தொலைபேசி: 230069

31, சிங்கர் தெரு,
பாரிமுனை, சென்னை – 600108.
தொலைபேசி: 25361039

6, சிவஞானம் தெரு,
தி.நகர், சென்னை – 600017.
தொலைபேசி: 24357832

110, வடக்கு ஆவணி மூல வீதி,
மதுரை. – 625001.
தொலைபேசி: 2622853

15, ராஜ வீதி,
கோயமுத்தூர் – 641001.
தொலைபேசி: 2397155

78, செரி சாலை,
சேலம் – 636001.
தொலைபேசி: 3207722

28, நந்தி கோயில் தெரு,
திருச்சி – 620002.
தொலைபேசி: 2706450

---

அச்சிட்டோர்: மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை–600 021.
தொலைபேசி: 25954528

# புரட்சிக் கவிதை

அடுக்கடுக்காய் சிலரிடம் போய் செல்வம் சேர
அதை இழந்த பலமக்கள் ஏழை யாகித்
துடிக்கின்றார் புழுப்போல. பிச்சைக் காரர்
தினந்தோறும் பெருகுகின்றார். இதை உணர்ந்தும்,
தடுத்துஅதை மாற்றாமல்; இரப்போ ருக்குத்
தர்மத்தைச் செய்துவரின், எந்த நாடும்
அடையாது பொது உடைமை. ஆகை யாலே,
அறஞ் செய்ய விரும்பாதே முன்னோர் போல.

நீக்கமற நிறைந்துள்ள கடவு ளுக்கு,
நிறமில்லை, வடிவில்லை என்றால்; தச்சன்
ஆக்கிதரும் மரப்பதுமை மட்டும், தெய்வம்
ஆய்விடுமா சொல்லுங்கள்? என்று, பக்தர்
மூக்குதனை உடைக்கின்ற கேள்வி கேட்டு
விரட்டாமல், தோள்மீது வாக னத்தைத்
தூக்கிவினை செய்யாதே. செய்தால் இந்த
தேசத்தில் உன்னைப்போல் முட்டாள் இல்லை.

வாடுகின்ற ஏழைமக்கள்; ஓடெடுப் போர்;
மான்விழிபோல் சாளரங்கள் அமைந்த, மாடி;
வீடுகளில் வசிப்பவர்கள்; உயர்வு; தாழ்வு;
வேண்டாத வேற்றுமைகள்; இதனைப் போன்ற
மேடுபள்ள மனப்பான்மை யோடு, இந்த
மேதினியை ஓர் தெய்வம் படைத் திருந்தால்;
மூடர்களை அறிவுள்ளோர் வெறுத்தல் போல
மதியற்ற தெய்வமிகழ். கும்பி டாதே!

மார்தட்டி, கூர்மீசை திருகி, ரத்த
வாளெடுத்து, "அந்தணாரி"ன் தலை எடுத்துப்
பார்த்திட்ட தென்னாட்டான். இனத்தைக் காக்கப்
போரிட்டோன். புவிப்பெரியோன். இரண்யன் தன்னை,
ஆரியர்கள் கூறுதல் போல் "அரக்கன்" என்று
இழித்துரைக்கும் தமிழ்மகனைப் பார்த்தால் பூணூல்
"பார்ப்பானின் கையேடே!" என்று கூவு.
பளிச்சென்று சுளிக்கச் சொல். பயப் படாதே.

நீர்மீது கொட்டிவிட்ட உப்பு போல
நம்தமிழர் வரலாற்றை அழித்த, ஆதிப்
பார்ப்பனரின் சாத்திரங்கள்; அதனை நம்பிப்
பாடிவைத்த நம்புலவர் பாடல் யாவும்,
வேர்வையைப்போல் பயனற்ற தண்ணீர். இந்த
விளக்கத்தை மறுப்பவர்கள், முன்னோர் கண்ட
சீர்திருத்தம் கொல்பவர்கள். அவரை எல்லாம்
துன்பத்திற்கிடங்கொடுத்துத் திருத்த வேண்டும்.

கோடையிலே பாடுகின்ற குயிலே! கண்கள்
கொத்தி இங்கு அழைத்துவந்த அழகே! சங்க
ஏடுதரும் பாடல்களின் சுவையே! அந்தி
இளங்காற்றே! எனப்புகழ்ந்து, பிறகு முத்தம்,
ஆடுகின்ற தருணத்தில்; உடலில் உள்ள
அணு அனைத்தும் பூரித்து மயங்க, இன்பம்
தேடுகின்ற நடு இரவில்; இனிக்க வைக்கும்
தையல்சொல் கேட்பதுபோல், போதை இல்லை!

*இதழ்: முரசொலி 10–9–1954*

# இப்படிக்கு!

வடவேந்தர் உடல்கிழித்தேன்; வேங்கை போல!
மார்தட்டும் பகைவர்தமைக் கொன்று கொன்று,
ஓடிபட்டேன். கொல்லனிடம் அடிகள் பட்டேன்
உடனே நான் செப்பனிடப் பட்டேன் மீண்டும்;
படைவீரன் வலக்கரத்தில் வசித்தேன். போரில்
பச்சை ரத்தம் பருகினேன். ஆனால் இன்றோ;
எடுப்பதற்கு ஆளின்றித் துருப் பிடித்து
இருக்கின்றேன்— இப்படிக்கு இரும்புப் போர்வாள்!

ஆவின்பால், கொம்புத்தேன், மற்றும் உள்ள
அபிடேகப் பொருள்போல; என்னைக் கொய்து
கோவிலுக்குள் அனுப்பாதே. நட்ட கல்லைக்
கும்பிடநான், பக்தனைப்போல் மூடனல்ல.
பாவுக்குள், வெண்பாவே சிறந்த தென்பர்.
பூவுக்குள் அப்படித்தான் நானும். வாழ்வில்,
தேவையுள்ள கீர்த்திபெற, என்னைப் பார்த்துத்
தெரிந்துகொள்—இப்படிக்குத், தாம ரைப்பூ!

மழைஎன்னும் நீர்க்கோடு; என்மேல் வீழ்ந்தால்,
மனைவிதொட்ட கணவன்போல் குளிரு கின்றேன்,
பழம்போல சுவையூட்டும் பெண்கள்; என்மேல்
படிந்தவுடன் மயங்குகின்றேன். 'தமிழர்க் கூட்டம்'
எழுந்ததுபார்' என்கின்ற குரலைக் கேட்க;
எதிரிகளின் பிரேதத்தை, ரத்தந் தன்னை,
இழுத்துக்கொண் டோட,இன்று விரும்பு கின்றேன்.
இப்படிக்கு ஓடங்கள் உலவும் ஆறு!

மண்ணுக்குள் வேர்நுழைந்து, விண்ணை நோக்கும்
மரங்களுக்குள்; வீரன்புகழ் எனக்கே உண்டு.
உண்மைஇது. துதிக்கைபோல் இருக்கும் தாறு,
ஒன்றீந்தால் நின்றுவிடும் எனது மூச்சு.
எண்ணிப்பார் பெண்பாவாய்! கோழை போல,
இருநூறு தரம்வாழ்வில் இறக்கின் றேனா?
எண்ணிப்பார் என்சாவை! வீரன் சாவை!
இப்படிக்கு மலையடியில் வாழும் வாழை!

வெள்ளத்தால் ஆபத்து எனக்கு இல்லை.
வெந்தணலில் வெந்திடவே மாட்டேன். என்னைத்
தள்ளுவது, விளக்கணைத்து இருட்டு தன்னைத்
தருவித்துக் கொள்வதுபோல் ஆகும். மாந்தர்
உள்ளத்தை உயர்த்திடுவேன், எனைநே சித்தால்.
வேம்பென்பர் மூடர்எனை. மாவில் சேர்க்க,
மொள்ளுகின்ற பாகுஎன, அறிஞர் என்னை
மதித்திடுவர் – இப்படிக்கு இறவாக் கல்வி!

அகப்பொருளின் இலக்கணத்தை அறிந்து, இன்பம்
அனுபவிக்கும் காதலரை; அரசர் தம்மை;
மிகப்பெரிய புலவர்களை; நாட்டைக் காக்க
வாளெடுத்த மாதர்களைச் சுமந்தேன். இன்றோ,
அகத்தைஇருட் டாக்குகின்ற புத்த கங்கள்
அடுக்கிவைத்த வீடுகளை; கோவில் தன்னை;
பகைவர்களைப்; பார்ப்பனரைச் சுமந்து, துன்பப்
படுகின்றேன் – இப்படிக்கு உன்தாய் நாடு!

*இதழ்: முரசொலி 15-10-1954*

# சிவப்பும், வெளுப்பும்

அந்தியிலே சிறுமயக்கம் அடைந்து; விண்ணின்
அழகுநிலா கண்டு,பெரு மூச்சு விட்டு;

சந்தனத்தைத் தொட்டு, உடல் வெப்ப மாகித்;
தணல்மீது நிற்பதுபோல் தவித்துப்; பின்னர்,

சுந்தரியும் சுந்தரனும், தோளில் சாய்ந்து
சுகங்காணும் சமயத்தில்; காதல் கண்கள்,

அந்திநிறம் போல் சிவக்கும்! இதழ்கள் – முத்தம்
அதிகரித்தால், தாழம்பூ போல் வெளுக்கும்!

குடைபிடித்து அரசாண்ட தமிழைப்; பாது
காத்துவரும் பாவலர்க்கும்; நாவ லர்க்கும்;

அடிபட்ட பால்மரம்போல், கண்ணீர் நீட்டி
அழுகின்ற ஏழைகட்கும்; மகர யாழைத்

தடவிஇசை எழுப்பிவரும் பாண ருக்கும்;
சதமென்று வருவோர்க்கும்; அள்ளி ஈயும்

கொடைவள்ளல் இருகரமும் சிவக்கும்! கேட்டும்
கொடுப்பதற்கு இல்லைஎனில் முகம் வெளுக்கும்!

மலைகாட்டி, தோள்காட்டி, உறுமு கின்ற
மேகத்தின் இடிகாட்டி, சத்தங் காட்டும்

அலைகடல்போல் பெரியபடை ஓர் புறத்தில்,
அதுபோல மற்றுமொரு படைஓர் பக்கம்.

பலநாட்கள் இருபுறத்தும் மரண யுத்தம்
போர்க்களத்தில் பாய்ந்துவரும் அம்பைக்கண்டு,

குலைநடுங்கும் கோழைகளின் கால் சிவக்கும்!
கோழைஉயிர் தப்பின், அவன் செயல் வெளுக்கும்!

இலைநிழலால் பந்தலிடும் சோலை சென்று,
இளவயது அரும்புகளை மோதி; நீரில்

மலர்ந்துள்ள தாமரையைத் தழுவி; கொல்லை
முல்லைக்கு முத்தமிடும் தென்றல் போல;

இலக்கணத்தில் ஈடுபட்டு; இசைநூல் கேட்டு;
இலக்கியங்கள் பலகற்று; தினம் ஆராயும்,

கலைவாணர் தமிழ்நெஞ்சம்! சிவக்கும்! கற்றோர்
கூட்டத்தில் அவர்சென்றால் புகழ் வெளுக்கும்!

அழகுநிலா; விண்மீன்கள்; அல்லிப் பூக்கள்!
ஆனந்தம் தேடுகின்ற அன்றில்; நாவல்

பழம்போன்ற கருவண்டு; அந்த வண்டின்
பிரயாணம்; காதலரின் போதைப் பேச்சு;

நிழல்தேடும் உயிர்க்கூட்டம். வீட்டுக் குள்ளே
நீண்டெரியும் ஒளிவிளக்கு; யாவும் ஒய்ந்து

கிழக்கினிலே கதிர்பிறந்தால் வான் சிவக்கும்!
கதிர்வெய்யில் பாய்ந்தவுடன் நிலம் வெளுக்கும்!

இலைதின்னும் ஆடுகளை மேய்த்துக் கொண்டே
இங்குவந்த ஆரியரை எதிர்த்து, வாழ்வில்

பலதடவைப் போரிட்ட இரண்யன் போல;
பட்டாளச் சிரிப்போடு, பகைக்கூட் டத்தின்

தலைஅறுத்து; எதிரிகளின் இரத்தத் தாலே
தரைமெழுக, திராவிடப் போர் தொடங்கும்நாளில்

உலைக்களத்தில் புதுஇரும்பு தினம் சிவக்கும்!
உருப்பெற்ற ஆயுதத்தின் வாய் வெளுக்கும்!

*இதழ்: முரசொலி 3–12–54*

# அதற்கல்ல

இருமுகின்ற மேகங்கள், முழுவா னத்தை
இருட்டாக்கும் மழைமாதந் தன்னில்; பிச்சி
அரும்பெடுத்து வாஎன்று உனக்கு ஆணை
இட்டேனே, அதுஎதற்கு? காலங் காட்டும்
கருவியிலா சயமத்தில், விளக்கு ஏற்றும்
காலத்தை, அவ்வரும்பு வாய் விரித்துத்
தெரிவிக்கும். அதை அறியக் கேட்டேன். அன்றிச்
சிங்காரப் பின்னல்தனில் சூட அல்ல!

விண்காற்று போல்ஓடி, நல்ல எண்ணெய்
வாங்கிவரச் சொன்னேனே எதற்கு? எந்தன்
கண்ணாளர் களஞ்சென்று, பலகை மார்பில்
காயத்தைப் பெற்றிறந்த சேதி கேட்டுச்,
சண்டைக்குப் போகின்ற எனது மைந்தன்
தலைமீது எண்ணெய்வைக்க வேண்டும். இந்த
எண்ணத்தை நிறைவேற்றக் கேட்டேன். அன்றி
இனிக்கின்ற திண்பண்டம் சுடுதற் கல்ல!

கூரையிலே சாய்ந்துள்ள சுரைக்காய் தன்னைக்
கொண்டுவரச் சொன்னேனே எதற்கு? இந்த
ஊர்மக்கள்; என்பல்லை, இளஞ் சுரைக்காய்
விதையோடு ஒப்பிட்டுப் பேசுகின்றார்.
கூருள்ள வெண்முல்லை அரும்பு என்று
கூறுகிறார் என்கணவர். இதை ஒப்பிட்டுப்
பார்க்கத்தான் கொடிச்சுரைக்காய் கேட்டேன். அன்றிப்
பக்குவமாய்க் கறிசமைத்துத் தின்ன அல்ல!

முத்தமிடும் ராத்திரியில்; அதிக மாக
முதிராத வெற்றிலையைப் போடு, என்று
சத்தமிட்டுச் சொன்னேனே எதற்கு? காதற்
செய்கையிலே ஈடுபட, போதை ஊட்டும்
வித்தைஇந்த வெற்றிலைக்குத் தெரியும். இந்த
விவரத்தை உணரத்தான் உரைத்தேன். அன்றித்,
தித்திக்கும் கனிஉதட்டின் மேலே, ரத்தச்
சாயத்தை வெள்ளம்போல் பெருக்க அல்ல!

பழனிமலைத் தொடர்சென்று வருவோம் என்று
பிடிவாதம் செய்தேனே எதற்கு? அங்கே,
மழைமேகம் முத்தமிடச் சம்ம திக்கும்
முதிரமலை ஒன்றுண்டு. அதுதான், ஈந்து
அழியாத புகழ்பெற்ற குமண வேந்தன்
அரசாட்சி செய்த இடம்! அதைப்பார்க் கத்தான்,
எழுந்திடுக என்றேனே தவிர; அங்கே
இருக்கின்ற கோவிலுக்குப் போக அல்ல!

ஒருதெய்வம் இருக்கட்டும் என்று, நேற்று
உரைத்தேனே, அதுஎதற்கு? உலக மக்கள்;
பெரும்பாலோர் தெய்வத்தின் நினைவு கொண்டுப்
பேசுகின்றார். மேலும்,நம் திராவி டத்தில்;
இருக்கின்ற பலதெய்வம் ஒழிந்து, ஒன்று
இருப்பதிலே தவறில்லை. அதனா லேதான்,
இருக்கட்டும் ஓர்தெய்வம் என்று சொன்னேன்.
இதுதவிர, பக்தர்க்கு பயந்து அல்ல!

*இதழ்: முரசொலி 20–8–1954*

# அந்த நாளில் இருந்ததில்லை!

வலைவீசும் படலங்கள்; புராண நூற்கள்;
வைப்பாட்டி வைத்திருக்கும் தெய்வம்; யாவும்
தலைதூக்கா நேரத்தில்; உரிமை தந்து
தமிழரெல்லாம் ஒரேஉலகம் கண்ட நாளில்;
'மலை' என்ற சொல்உண்டு. 'அசலம்' இல்லை.
'மறை' உண்டு. வேதமில்லை. மீட்டும் யாழில்,
புலமை மிக்கோன் ராவணன்தான் இருந்தான். அன்றிப்
பார்ப்பார நாரதர்கள் இருந்த தில்லை!

விழித்தபடி இருக்கின்ற விழியை நோக்கி
வேல் வந்தால்; விலகிவிட்ட ஆடை தன்னை,
இழுத்துடனே மூடுதல்போல், இமை மூடாமல்;
எதிர்த்திட்ட போர்வீரர் இருந்தார் அன்றி;
செழித்தமரக் கூட்டத்தில் மறைந்து கொண்டு
சூழ்ச்சியுடன் அம்பெய்து, வாலி தன்னை,
அழித்தானே வடநாட்டு ராமன், அந்த
ஆரியன் போல பேடிஇங்கு இருந்த தில்லை!

கடன்பட்டோன் தான்பட்ட கடனைத் தீர்க்க,
கால் நடைகள், நிலம், வீடு வாசல், என்னும்
உடைமைகளை தான் விற்பான்; வேறு ஏதும்
வழியில்லை, வகையில்லை, கொடுப்ப தற்கு
முடியவில்லை எனத்தெரிந்தோன்; மானமுள் ளோன்,
மரணத்தை ஏற்பதன்றி – அரிச்சந் ரன்போல்,
கடனுக்கு மனைவிதனை, இங்கே விற்ற
கதையில்லை. சரித்திரத்தில் அழுக்கு இல்லை.

நுரைவட்டம் போலிருக்கும் நிலவு, விண்ணில்
நீந்துகின்ற வேளைதனில் வந்து; பள்ளி
அறைதனிலே எரிகின்ற புகை விளக்கை
அணைத்து அவ் விடந்தன்னை இருட்டு ஆக்கி;
முறை வைத்து, ஐவருக்கு மனைவி யாகி
முத்தமிட்டும்; மற்றுமவள், கர்ணன் என்னும்
துரைஅணைய மாட்டாரா!" என நினைத்த
துரோபதைக்குக் கோயில் அன்று இருந்த தில்லை.

மழை வானம் தனில் தோன்றும் வான வில்லை,
'மேகத்தின் புருவம்' எனக் குறித்தார் அன்றி,
அழிந்துவிடும் இளமைக்கு உவமை காட்ட,
அதை எடுத்துக் கூறவில்லை அந்த நாளில்.
விழிதன்னை மலர் என்றும்; முகத்தில் வைத்த
விளக்கென்றும் வர்ணிக்க மறந்து; பீளை
எழுகின்ற இடமென்னும் கிழ நினைப்பை
எந்நாளும் சொன்னதில்லை நமது முன்னோர்!

கடவுளெனும் தெளிவில்லா நினைவு பற்றிக்
கவலை என்ப தந்நாளில் இருந்த தில்லை.
தடையில்லை காதலுக்கு. சாதிப் பேதச்
சண்டைஎன்றே ஒன்றில்லை. வாழைப் பூவின்,
மடல்போன்ற காதுள்ள குதிரை, யானை,
மற்றும், தேர், காலாட்கள், அனைத்தும் உள்ள
படைவேந்தர் வெற்றிக்குத் திருநாள் உண்டு.
படித்துறைக்கும், கற்களுக்கும் விழாக்கள் இல்லை.

*இதழ்: முரசொலி 27-8-1954*

# பழையநிலை மறந்தேவிட்டாய்!

மலைபடுத்துக் கொண்டிருக்க; அதன்மேல் ஈர
முகில் படுத்துக் கொண்டிருக்கும் சேர நாடே!
சிலை செதுக்கக் கல்தந்து; மாதர்க் கெல்லாம்
சித்திரம் போல் எழில் தந்து; நிதிகள் தந்து;
இலைவிரித்து, நிழல்திறக்கும் குளிர் பூஞ்சோலை
எப்போதும் உயிருள்ள நதிகள்; என்றும்
விலை வளர்க்கும் யானைப்பல்; அனைத்தும் தந்து
வருகின்றாய்; அதற்காக வாழ்த்து கின்றேன்!

கருவத்தால்; ஆணவத்தால்; நமைப் பழித்த
கனக—விசயர் என்னும் பூணூல் மன்னர்
சிரத்தின் மேல் கல் ஏற்றிக் காட்டி னானே
செங்குட்டு வன்என் போன்; அவனைப் போலே,
பரவுகின்ற புகழ் வளர்த்துக் காட்டும் வீரர்;
பகுத்தறிவைக் கொல்லாத கல்வி; சாதிப்
பிரிவுகளைப் பிணமாக்கும் சக்தி—தன்னைப்
பெருக்கவில்லை, அதற்காக வருந்து கின்றேன்!

வயல்கொடுக்கும் செந்நெல்லை உணவாய் மாற்றி
விருந்து வைத்துக் கொண்டிருக்கும் சோழ நாடே!
வெயில் பார்க்கும் தாமரையைக் குளத்தில் வைத்து;
வானத்தில் மழைவைத்து; பெய்ய வைத்து;
தயவை எதிர் பார்க்காத பொன்றி ஆற்றைத்
தரைமீது ஓடவைத்துத்; தொழில்கள் வைத்து;
குயில் வளர்த்துக், கலை வளர்த்துப் பெருமை தேடிக்
கொடுக்கின்றாய்; அதற்காக வாழ்த்து கின்றேன்!

கரிகாலன் அரசாண்ட நாட்டில், இன்று
கயவர்களை, அமைச்சர்களாய் நியமிக்கின்றாய்
எரிகின்ற நெருப்பின்மேல், புராண ஏட்டை
இழுத்தெறிய மலைக்கின்றாய்; பக்தர் மூலம்
வருமானம் தேடுகின்ற கடவுள் தனை
வீதியிலா பவனிவரச் செய்கின் றாய் நீ;
இருள் துரத்த விளக்கெடுத்தால், அதை அணைப்பாய்
என்கின்றாய்; அதற்காக வருந்து கின்றேன்!

பழச்சாறு போல் இனிப்பு ஊட்டும், சங்கப்
பாடல்தனை வைத்திருக்கும் பாண்டி நாடே!
மொழி வளர்க்கும் கலைஞர்களைப் புகழ்ந்தாய்; வெள்ளை
முத்துக்கள் தனை ஈந்தாய்; கைசி வந்தாய்;
இழிந்தசெயல் புரிந்தவனைக் கொன்று அன்னோன்
இரத்தத்தில் கொலைவாளைப் படுக்க வைத்தாய்.
விழி,முடிவு செயும்காதல் திரும ணத்தை
வளர்த்திட்டாய்; அதற்காக வாழ்த்து கின்றேன்!

சக்கரை போய் கரும்பின்மேல் மோத; அந்தச்
சமயத்தில் தேன் வந்து சேர்ந்து கொள்ளும்,
முக்கூட்டுச் சுவை போன்ற தமிழைக் காக்க,
முன்போல நீ, சங்கம் அமைக்கவில்லை.
நக்கீரன் போன்றவனை மீண்டும், இந்த
நாட்டுக்கு அளிப்பதற்கு மறந்தே விட்டாய்.
தக்கைகளைப் பெற்றெடுத்து, மனிதர் என்று
தருகின்றாய்; அதற்காக வருந்து கின்றேன்.

*இதழ்: முரசொலி 4–9–1954*

# துப்பாக்கித் துரைத்தனம்

## துறைமுகத்திலே!

குத்துகின்ற துன்பங்க ளோடும்; தண்ணீர்
குடியிருக்கும், குளம்போன்ற கண்க ளோடும்;
கத்துகடல் சென்னைநகர் தன்னில், அங்கு
கடலாடும் துறைமுகத்தில் வேலை செய்வோர்,

அத்தனைபே ரும்சேர்ந்து, உரிமை கேட்க;
ஆதரிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ள;
மெத்தையிலே படுத்துறங்கும் அரசாங் கத்தார்,
மிதிஎன்றால்— உதைஎன்றால்— என்ன அர்த்தம்?

## ஏழு பிணங்கள்

அப்பாவிப் பொதுமக்கள் ஏழு பேரை
அரசாங்கப் போலீசின் கரத்தில் உள்ள
துப்பாக்கி சுடுவானேன்? குற்ற மற்றோர்
துடிதுடித்துச் சாவானேன், துறைமு கத்தில்?
சிப்பாயின் துணைகொண்டு, தினமும், சாவுச்
சித்திரங்கள் தீட்டிவரும் ஆட்சி யாளர்,
குப்பையிலே தள்ளுகின்றார் நீதி தன்னை!
கொய்கின்றார்; பறிக்கின்றார்; உரிமை தன்னை!

## காங்கிரஸ் அகிம்சை

அமைதியினை நிலைநாட்ட, சுட்ட தாக
அறிவிக்கின் றார்காங்கிரஸ் தலைவர், என்ன
உமிப்பேச்சு? உரிமட்டை வார்த்தை? இந்த
உத்தமரின் வாயசைவில்! சுட்டுக் கொன்று
எம உலகம் அனுப்புகின்றார். கேள்வி கேட்டால்
எதிர்வாதம் புரியாதே; இதுதான், நாட்டின்
அமைதியினைக் காப்பாற்ற உதவி செய்யும்
அரசாங்கத் தின்அகிம்சை, என்கின் றார்கள்...!

*இதழ்: இலக்கியம் 1–7–1958*



அ·அ-2

## நம்பியாரின் ஸ்டண்ட்

வாய்ப்புகை வண்டி என்னும்
ரயில்வேயில் வேலை செய்வோர்,
தேய்வதைத் தடுக்க; வாழ்வைச்
செழிப்பாக்கிக் காட்ட வேண்டி,
மாய்மாலக் கம்யூ னிஸ்ட்டு
நம்பியார், உண்ணா நோன்பு
ஆய்தத்தை ஏந்து வாராம்,
அக்டோபர் இரண்டாந் தேதி!

வாடிய பயிரைக் கண்டு,
வருந்தினார் ராம லிங்கர்;
வாடிய மாந்தர் கண்டு,
வாடினார் புத்தர்; நாட்டில்
வாடுவோர் தொகையைக் கண்டு
வருந்துமோ டாங்கே கூட்டம்!
ஆடுகள் நனையக் கண்டு
அழுவதேன் ஓநாய்க் கும்பல்?

ஆயுதம் 'புரட்சி' என்று,
ஆர்ப்பாட்டம் செய்வோ ருக்குக்;
காயிதக் கப்பல் செய்யும்
கட்சிக்கு; நம்பி யார்க்கு,
நாயனார்–வினோபா–காந்தி
நடைமுறை நோன்பெ தெற்கு?
ஆயிரம் ஸ்டண்டில் உண்ணா
விரதமும் ஒன்று தானே?

ரத்தத்தை நாக்கால் நக்கும்
நரிக்கட்சி நம்பி யாரே,
ஒத்திகை வேண்டாம், வீணே,
உடல்எடை குறைக்க வேண்டாம்!
எத்தர்கள் என்ற றிந்தால்,
ஏமாறு வாரோ மக்கள்?
சித்தத்தைத் திருப்பும் இந்த
ஸ்டண்ட் எல்லாம் பலித்திடாது!

இதழ்: இலக்கியம் 1–10–1958

# அலுவலகமா? ஆலயமா?

துணிமனை
என்றால்
ஆங்கே
தொங்கலாம்
துணிகள்!

மற்றும்
பிணிமனை
என்று
கூறும்
மருத்துவ
மனையாம்
ஆங்கே
இணையிலா
மருந்து
வர்க்கம்
இருக்கலாம்!

மதச்சார்
பற்ற
பணிமனை
தன்னில்
தெய்வப்
படங்களேன்
தொங்க வேண்டும்?

இதழ்: சுரதா 15-7-1968

# வழித்தெறிய வேண்டிய வியர்வை!

செழித்தமொழி தமிழொன்றே!
தமிழைக் கற்றால்
சிரஞ்சீவித் தன்மைவரும்!
வியர்வை போலே
வழித்தெறிய வேண்டியதோர்
மொழியாம், அந்த
வடமொழியின் வார்த்தைகளை
உச்ச ரித்தால்,

இழைத்தமைத்த ஆயுளது
குறையும்! என்றே
எழுதியுள்ள கட்டுரையை
வரவேற் கின்றோம்!
அழுக்குமனப் பித்தரதை
எதிர்த்த போதும்
ஆலமரம் தென்றலுக்கோ
சாய்ந்து வீழும்?

*இதழ்: சுரதா 1–8–1968*

# அரசியல் கீர்த்தனை - 1

## தோற்றது நல்லதுதான்!

### எடுப்பு

தோற்றது நல்லதுதான் – காங்கிரஸ்
தோற்றது நல்லதுதான்

(தோற்றது)

### தொடுப்பு

ஈற்றடி போலே இருந்த தி.மு.க.
எங்களை வென்ற திருக்கட்டும்! நாங்கள்

(தோற்றது)

### முடிப்பு

காட்டுக்கு ராமன் போனது போலே
காங்கிரஸ் ஆச்சுதப்பா – இனி
நாட்டின் குறைகளை நாங்கள் அறிந்திட
நல்லதோர் தருணமப்பா! – அதனால்

(தோற்றது)

வந்ததும் நாங்கள் வரிகளை குறைப்போம்
மக்களை வாழவைப்போம் – என்று
சிந்துகள் பாடிய சீமான்கள் ஆட்சியில்
தீர்ந்ததா மக்கள்குறை? சொல்வீர்

(தோற்றது)

குறிப்பு:

செழிப்பொடு விளங்கும் விழுப்புரம் தன்னில்
தோழர் உயர்திரு துரைஇலக் குவனின்
தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் தன்னில்
தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராம்
சுப்பிர மணியம் இப்படிப் பேசினார்!

பழுத்த அமைச்சர் பக்த வத்சலமும்
கடபுடா கக்கனும் கனைகுரல் அனந்தனும்
பூவா அரும்புப் பூவரா கவனும்
தமிழக அரசினைத் தாக்கிப் பேசினரே!

இதழ்: சுரதா 15-7-1968

# அரசியல் கீர்த்தனை - 2

**என் படத்தை மாட்டாதீர்**

எடுப்பு

பள்ளிக்கூடத்திலே என்
படத்தை மாட்டாதீர்!

(பள்ளி)

தொடுப்பு

உள்ளம் திறந்து சொல்லுகிறேன் – நான்
உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்

(பள்ளி)

முடிப்பு

இன்று நான் பதவியில் இருந்து வருகிறேன்
என்பதால் பெரியவனா – புவியில்
என்றுமே புகழுக் குரியவர் அமர்ந்திடும்
இடத்திற் குரியவனா?

(பள்ளி)

இசைபட வாழ்ந்தோர் எவரெவர் என்பதை
எழுதிக் காட்டுங்கள்! – பெரும்
பசிதொடும் வயிற்றுக்குச் சோறிடல் போலவர்
படங்களை மாட்டுங்கள்!

(பள்ளி)

குறிப்பு

கன்னித் தமிழகக் கல்வி அமைச்சராம்
நெட்டை நாவல ராம்நெடுஞ் செழியன்
செயங்கொண் டானெனும் திருநகர் தன் னில்,
ஆசிரியர் சங்க ஆண்டு விழாவினில்
இவ்வாறு பேசினார். இவரது பேச்சில்
சங்க நூல்களின் சாரம் இருந்தது.

வார்த்தை இலக்கியம் வளர்த்த அமைச்சரை
அரசியல் பகைவரும் ஆத ரித்தனர்!
இவர்போல் அடக்கம் எல்லோர்க்கும் வேண்டுமே
என்ற பேச்சும் எழுந்ததாம் ஆங்கே!

*இதழ்: சுரதா 1-6-1968*

# அரசியல் கீர்த்தனை - 3

## ஆடையில் அதிகம் அழுக்கிருந்தால்

### எடுப்பு

துணியில் கொஞ்சம் அழுக்கிருந்தால் – அந்தத்
துணியைத் துவைத்திடலாம் – தோழரே
(துணியில்)

### தொடுப்பு

துணியில் அதிகம் அழுக்கிருந்தால் – அது
துவைப்பதால் போகாது– தோழரே
(துணியில்)

### முடிப்பு

அதிகம் அழுக்குள்ள ஆடையை நாம்வெள்
ளாவியில் வைப்பதுபோல் – கதர்ச்
சதகம் பாடிவரும் காங்கிரசால் ஏற்பட்ட
சகதியைப் போக்குகின்றேன் – தோழரே
(துணியில்)

ஈர விறகையும் இடிந்த அடுப்பையும்
எம்மிடம் தந்துவிட்டு – சமைக்க
நேர மாகுதே என்று கேட்பது
நியாயமா? சொல்லுங்கள் தோழரே.
(துணியில்)

குறிப்பு:

தேவாரம் பாடிய மூவ ராலும்
குறவஞ்சி பாடிய ஒருவ ராலும்
பாராட்டப் பெற்ற பழம்பதி யாகிய
குறும்பலா நிறைந்துள்ள குற்றா லத்தில்
தகுதி மிக்க தமிழக முதல்வராம்
பேரறிஞர் அண்ணா இவ்வாறு பேசினார்.

அருவியில் ஈரமும் அவர் பேச்சில் சாரமும்
எப்போதும் இருக்கும்! அப்போதும் இருந்ததே!

*இதழ்: சுரதா 1–7–1968*

# அரசியல் கீர்த்தனை - 4

## புகழின் உச்சியில் இருந்தவர்

### எடுப்பு

புகழின் உச்சியில் இருக்கையிலே – மறைந்து
போய்விட்டார் அறிஞர் அண்ணா – பெரும்

(புகழின்)

### தொடுப்பு

அகமும் புறமும் வெப்பக் கொப்புளம்
ஆகவும் நாமெலாம் அழவும் – அந்தோ

(புகழின்)

### முடிப்பு

எளிமை அவரது தனிச்சிறப்பு – நானவர்
இடத்தில் கொண்டிருந்தேன் பெருமதிப்பு
விளையும் பருவத்தில் அவர்நமைப் பிரிந்தது
வீட்டுக்கும் நாட்டுக்கும் பேரிழப்பு–அந்தோ!

(புகழின்)

மத்திய அரசினை மதித்து நடந்தவர் – யாரையும்
மட்டம் தட்டாத தலைவராய்த் திகழ்ந்தவர்!
கத்துங் கடற்கரை அருகில் புதைந்தவர் – முதல்வர்
கடமை கண்ணியம் கட்டுப்பா டறிந்தவர் – அந்தோ!

(புகழின்)

## குறிப்பு

முத்தமிழ் நாட்டின் முதல்வராம் அண்ணா
கால மானபின் கடற்கரை தனிலோர்
இரங்கற் கூட்டம் இரவில் நடந்தது.
பெரியார் பேசினார், பிறரும் பேசினர்
முழுப்புகழ் பெற்ற முதல்வரைப் பற்றி
பண்பு மிக்க பாரதப் பிரதமர்
இந்திரா காந்தி இவ்வாறு பேசினார்:

தண்ணீர் இருந்தது கடலில்; உப்புக்
கண்ணீர் இருந்தது இந்திரா கண்ணிலே!

*இதழ்: சுரதா 15-2-1969*

# வி.வி.கிரியை வெற்றி பெறச் செய்வீர்!

சிக்கிக் கொண்டிருக்கும் ரெட்டி,
சீறிக்கொண் டிருக்கும் தேஷ்முக்,
விக்கிக்கொண் டிருக்கும் மூப்பு
மேலிட்ட கிரியார், மற்றும்
திக்கிக் கொண் டிருப்போர் – எல்லாம்
ஜெனஅதி பதியாய் ஆக
முக்கிக்கொண் டிருக்கின் றார்கள்
மூவைந்து நாட் களாக!

கலன்கழி – மடந்தை இந்த்ரா
காந்தியை விரைவில் வீழ்த்திப்
பலன்பெறக் கருதும் காலப்
பகைவர்கள் ஒன்று சேர்ந்து
தெலுங்குசஞ் சீவி யாரைத்
தேர்தலில் நிறுத்தி யுள்ளார்,
சிலம்பெனப் புலம்பச் செய்யும்
தேர்தலில் பலர்நிற் கின்றார்.

மூக்கிலே மச்சம் உள்ள
முன்னாளின் முதல்வ ரெல்லாம்
வாக்கிலே நட்பு வைத்தும்,
மனத்திலே பகைமை வைத்தும்,
நோக்கிலே நெருப்பு வைத்தும்
நுனிநாக்கை ஆட்டு கின்றார்,
போக்கிலே, பதுங்கிப் பாயும்
புலியென விளங்கு கின்றார்!

அப்பப்பா நிஜலிங் கப்பா
அடிக்கடி சிலரைக் கண்டு
தப்பப்பா கிரிக்கு வெற்றி
தருவது தீமை யப்பா!
உப்பப்பா! நமது ரெட்டி,
உத்தம சீல ரப்பா
ஒப்பப்பா! இதனை என்றே
உள்ளத்தைக் கரைக்கின் றாராம்!

எட்டிக்காய் தேசு முக்கும்,
இலவங்காய் ரெட்டி யாரும்
மட்டைக்காய் என்னும் தேங்காய்
மனிதராம் கிரியும், தேர்தல்
வெட்டுக்காய் அரங்கம் தன்னில்
வெற்றியை எதிர்பார்க் கின்றார்.
எட்டிக்காய் இலவங் காய்கள்
இரண்டுமே நமக்கு வேண்டாம்!

கையாட்கள் கையில் உள்ள
கம்புதான் ரெட்டி! இங்கே,
பொய்யாட்கள் ஏலங் கூறும்
போர்வைதான் தேஷ்முக்! ஏதோ
மெய்யாட்கள் போல வந்து
மின்னுகின் றார்கள்! தீமை
செய்யாக் – கள் உண்டோ? பாலைத்
திருடாத பூனை உண்டோ?

இலைமீது வெண்சோ றிட்டால்
எடுத்துநாம் உண்ணக் கூடும்,
இலைமீது சுண்ணாம் பிட்டால்
எவரெடுத் ததனை உண்பார்?
தலைமீது குல்லாய் வைக்கும்
சஞ்சீவி, சிறிய புன்னை
இலைமீது வைத்த சுண்ணாம்
பென்பதை மறந்தி டாதீர்!

பரியைநாம் நம்பி ஏறின்
பள்ளத்தில் தள்ளக் கூடும்,
நரியைநாம் நம்ப லாமோ?
நமக்கின்று கிரிதான் வேண்டும்!
கிரியைநாம் மதித்தல், எண்ணெய்க்
கிண்ணத்தில் நனைந்த பஞ்சுத்
திரியைநாம் மதித்தல் ஒக்கும்!
திரிதானே ஒளியைக் கக்கும்!

இதழ்: சுரதா 15–8–1968

# செப்டம்பர் - 17

## பெரியார்

தாக்குதல் எதற்கும் அஞ்சாத
தைரியச் சிங்கம்! சாதி
நாக்கினை அசைத்து வாழும்
நரிச்செயல் ஆரிய த்தைத்
தூக்கிலே மாட்டு கின்ற
சுயமரி யாதை இயக்கச்
சாக்கிரட் டீசு—இன்னார்
சனித்தநாள் இந்த நாளே!

## தி.மு.க.

ஈடிலாப் புதுமை எண்ணம்
ஈபவர், இனிக்கும் பேச்சுப்
பாடகர்; அறிஞர்; கல்விப்
பயனெனப் பயன ளிப்போர்.
தாடியில் லாத பர்னாட்
சாநமக் கமைத்துத் தந்த
வாடுதல் இல்லாக் கட்சி
மலர்ந்த நாள் இந்தநாளே

## காவியம்

காவியம் இன்று தோன்றும்
கவியிதழ்; இதுவோ, நல்ல
சேவைகள் புரியும், கொம்புத்
தேன்சுவை எழுத்து மூலம்!
கோவிலின் வியாபா ரத்தைக்
கொட்டிடும் தேள்ம தத்தை;
ஆவிவைத் திருக்கு மட்டும்,
அழித்திட வேலை செய்யும்.

*இதழ்: காவியம் 17–9–1995*

# இவர்கள் யார்?

அந்தந்த நாட்டினைச் சொந்தக் குடிமக்கள்
ஆளுவ தன்றோ அரசுரிமை — இங்கு
வந்து இறங்கிய அந்நியர்க் கிந்திய
மண்ணில் உரிமைகள் என்ன உண்டு?

நட்டு வளர்த்த மரத்தினி லோர்சிட்டு
நாலாறு ஆண்டு வசித்திடினும்— மஞ்சள்
பட்டுச் சிறகு விரித்திடும் சிட்டுக்கப்
பச்சை மரம் சொந்த மாய்விடுமோ?

எத்தனைக் காலம் இருப்பினும் அந்நியர்க்
கிந்தியா பிச்சைக்குடித் தனமே — நாட்டை
ரத்துச் செய்யும்படிச் சொல்லிடு வோம் — மீறின்
ரத்தச் சரித்திரம் கண்டிடுவோம்.

அன்னமே என்று அழைத்திடும் ஆண்களே!
ஆவேசத் தோடு எழுந்திடுவீர் — அங்கு
என்ன நடந்திடும் பார்த்திடுவோம்— கோவா
எத்தர்க் கணக்கினைத் தீர்த்திடு வோம்!

முத்தமிடும் புதுக் காதலர்க்கும் இன்று
முக்கியம் நாட்டின் விடுதலைதான் — வீரச்
சத்தங் கொடுத்துப் புறப்படுவோம் — போரில்
சாவு வரினும் சிரித்திடு வோம்!

தேகம் எடுத்திட்ட மானிடர் யாவரும்
செத்து மடிவது நிச்சயமே – இன்று
சாகத் துணிந்து எழுந்திடு வோம் – கோவா
சர்க்காரை ஓட்டி விரட்டிடு வோம்!

வெள்ளையர் தம்மையே பெட்டி சட்டியொடு
வீட்டுக் கனுப்பிய நம்மவர்க்கு – இந்தச்
சுள்ளியின் கட்டுகள் எம்மாத் திரம் – பெருந்
தூணுக்கு முன்அவை நின்றி டுமோ?

(போர்ச்சுக்கீசிய போராட்டந்தனில் விடுதலைக் குரலை வீறிட்டெழுப்பிய மதுரை மறத்தமிழ் மாது சுபத்திரா தேவி எழுப்பிய தீப்பொறிப் பேச்சை கர்ச்சனை புரியும் கவிதைகளாக்கி மருத்துவன் தந்திடும் மருந்துபோல அளவொடு தந்துளோம் அச்சு எழுத்திலே)

*இதழ்: காவியம் – 17–9–1955*

## தில்லியின் திடீர் வேட்டு தெட்சிணப் பிரதேசம்!

### அந்தப்புரத்திலே ஆலோசனை

இந்தியை எதிர்க்கின் றார்கள்
எதிர்ப்பது மட்டு மல்ல;
செந்தமிழ்த் தனிமை கேட்டுத்
தென்னவர் துடிக்கின் றார்கள்
மந்தமாய் இனியி ருந்தால்
வளையல்போல் ஒடிப்பர் – நம்மைத்
தந்திரம் செய்தல் வேண்டும்
தமிழரை அழுத்து தற்கு!

### பஞ்சசீலம் பேசுவோரின் வஞ்சக வெளியீடு

இவ்விதம் பேசி; டில்லி
இருட்டுக்குள் திட்டம் போட்டு,
அவ்வையார் வாழ்ந்த நாட்டை
அமிழ்த்திடப் பார்க்கின் றார்கள்.
செவ்விய நமக்குக் கூட்டுத்
'தெட்சினப் பிரதே சம்'ஏன்?
எவ்விதம் பொருந்தும் – டில்லி
இணைத்திட எண்ணும் எண்ணம்?

வேண்டாம் நமக்கு இந்த
கொட்டாங்கச்சி இட்டிலி

கவின்மலை யாளம்; கொஞ்சம்
கருநடப் பகுதி – சேர்த்து
அவியலைப் போல்நம் நாட்டை
ஆக்கிட எண்ணு கின்றீர்.
புவிபுகழ் தெற்குப் பக்கம்
புதுப்புயல் தோற்று வித்தால்
சுவருக்கு இடியைப் போல
தென்னகம் நடந்து கொள்ளும்!

இதழ்: காவியம் – 25-9-1995

# இது என்ன ஆட்சி?

காடுகள் கொன்று நாடாக்கி – பல
கட்டிடம் மாளிகைக் கட்டிக் கொடுத்தோம்;
மாடு இழுத்திடும் ஏரால் – வயல்
மண்ணைத் திருத்திநல் தானியம் தந்தோம்;
ஆடும்தறி அதனாலே – மக்கள்
ஆசைப்படும் துணிமேடைகள் தந்தோம்;
ஓடு எடுத்தலை கின்றோம்! – காது
ஓலையைப்போல மனம் சுருள்கின்றோம்!

கட்டி மலையைப் பிளந்தோம் – பூமி
கர்ப்பத்தில் உள்ள பசும்பொன் எடுத்தோம்;
வெட்டிய தால் உருவான – குளம்
வீதிகள், பாதைகள் உண்டாக்கி வைத்தோம்;
சுட்டும் விழிநிறங் காட்டும் – கடல்
சுற்றித் திரிந்திடக் கப்பல்கள் செய்தோம்;
கொட்டும் மழைநீரைப்போல – கண்ணீர்
கொடுகின் றோம்பசித் துன்பத்தி னாலே!

இரவின்பனி, பகல்வெய்யில் – புயல்
இடிமழை நோய்கள் தருந்துயரோடு
தெருவினில் கையேந்து கின்றோம் – இந்தத்
தேசத்தில் பட்டினிப் பூச்சியா கின்றோம்!
மரங்களைப் போல்நனை கின்றோம்– வீதி
மண்ணில் படுத்திரு கைபோர்த்து கின்றோம்
பரிதாப மன்றோ இக்காட்சி – பரி
காரம் செயாவிடில் இதுஎன்ன ஆட்சி?

*இதழ்: காவியம் – 25–9–1955*

# மொழிவழி பிரிந்து இனவழி சேர்வோம்!

## கேட்டோம்; குளிர்ந்தோம்

மொழிவழி வேண்டு மென்று
முன்னரே எடுத்து ரைத்தோம்
இழுக்கடித் தார்கள் நம்மை
இதுவரை; ஆனால் இன்று
மொழிவழிப் பிரிவு செய்ய
முனைந்துளர் ஆட்சி யாளர்!
மழையெனக் குளிர்ந்தோம்; கேட்டு
மகிழ்வொடு வாழ்த்து கின்றோம்!

## எழுச்சியை வளர்ப்போம்!

மொழிவழிப் பிரித்த பின்னர்
'முற்றிற்று' அதிகா ரத்தை
எழுதிடும் எண்ணத் தோடு
இருக்கிறார் ஆட்சியாளர்!
கொழுத்திடும் வடக்குப் பக்கக்
கொடுமையை விட்டு நீங்க
எழுச்சியை வளர்ப்போம்! நாமோ
இனத்தினால் ஒன்று சேர்வோம்

## சென்னை யல்ல- 'தமிழ்நாடு'தான்!

கன்னடம் பேசும் நாடு
கன்னட நாடு என்றால்,
தொன்மையும், புகழும் பெற்ற
தூயதமிழ் நாடு மட்டும்,
சென்னையா? இதனை, ஆள்வோர்
'செந்தமிழ் நாடு' என்று
இன்றைக்கே திருத்தல் வேண்டும்
இல்லையேல் போராட்ட டந்தான்!

*இதழ்: காவியம் – 9-10-1955*

## அடிக்கடி பவனி வருகிறார்!

### சிங்கம் இரை கேட்குமா? இசை கேட்குமா?

அழகிய வண்டு, சோலை
அடிக்கடி வருதல் போல,
பழுநிற நேரு, சொந்தப்
பவனியைத் தொடங்கி விட்டார்.
எழுந்தது சிங்கம் என்பர்
இங்குள்ள காந்தி பக்தர்
எழுந்தது சிங்கம் என்றால்,
இரைதேடும்? இசையா தேடும்?

### அழைத்துப் பேசினால் அந்தஸ்தா குறைந்து விடும்?

வரப்போகும் நேரு, இங்கு
வந்ததும் அறிஞர் அண்ணா
பெரியாரை அழைத்து, நாட்டின்
பிரச்சினை தீர்த்தால் என்ன?
மரியாதை குறைந்தா போகும்?
மாம்பலம் மட்டும் போவார்?
தெரியாதா இவரைப் பற்றி
திரிகின்ற பறவை தானே?

## மக்கள் சாகும்போது முக்கியம் சங்கீதமா?

சாகின்றார் மக்கள், ஆனால்
சந்தோட மாக நேரு
போகின்றார் கீதம் கேட்கப்,
பொருந்துமா இந்தச் செய்கை?
ஆகஸ்டுப் பெருமை பேசும்
அலகாபாத் வீரர், தெற்கு
சாகட்டும் என்கின் றாரா?
தனிஆட்சி தருகின் றாரா?

*இதழ்: காவியம் – 2–10–1955*

# மக்களுக்கு வேண்டுவது
# பக்தியா? பகுத்தறிவா?

## விஞ்ஞானம் வளரும் வெளிநாட்டிலே!

தேயுமோர் நிலவி டத்தில்
சென்றிட முயலும் நாட்டில்
ஆயுத பூசை யில்லை!
அறியாமை இல்லை! இங்கே
ஆயிரம் பூசை செய்து
அனுதினம் கும்பிட் டாலும்,
தாயத்து மந்தி ரிக்கும்
தற்குறித் தனந்தான் மிச்சம்.

## ஆட்டுமந்தை ஆகாதீர்!

நாட்டிலே உள்ளோர், கல்வி
நலம்பெற வேண்டு மென்றால்
ஏட்டினைத் தொழுவ தாலே
ஏற்பட்டு விடுமா? வீணே
ஆட்டுக்குப் பின்னே செல்லும்
ஆடுபோல், சிந்திக்காமல்
காட்டிடும் பக்தி யாலே
கல்வியா நாக்கில் ஏறும்?

## உண்டா இதில் உண்மை?

கலைத்திரு நாளென் றிட்டால்
கருத்துக்கள் அதிலி ருக்கும்.
உலகெலாம் உணர்ந்து ஓதற்
கரியவன் மனையாம், சக்தி
பலத்தினை எடுத்துக் கூறும்
பக்தர்கள் நடந்து கின்ற,
கொலுத்திரு நாள்ச டங்கில்
கொஞ்சமும் உண்மை உண்டா?

இதழ்: காவியம் 21–10–1955

# அந்த நாள் என்று வருமோ?

பழமை அழிந்தது! புதுமை மலர்ந்தது! இங்கு
பகுத்தறி வாளர் பெருகிய தாலே!
இழிவு தரும்செயல் யாவும் மறைந்தன– நாட்டில்
இருப்பவர் அனைவரும் கற்றவர் ஆயினர்.
உழவும் தொழிலும் இளமைபோல் வளர்ந்தன; உலகில்
உயர்ந்த திருக்குறள் வார்த்தைகள் பரவின.
அழுகையில் லாதஓர் ஆனந்த உலகம் –அமைந்த
அந்தநாள் தமிழர்க்கு என்று வருமோ?

ஆயிரம் தெய்வம் இனிஇலை இங்கே–நூறு
ஆயிரம் அறிஞர் தோன்றினர் நாட்டிலே
தாயினும் சிறந்த தமிழ்மொழி தனிலே –சங்கம்
தந்தது போல்கவி தருபவர் பிறந்தார்;
காயமிது பொய்யெனும் கருத்து உடையோர்–இன்பக்
காதல் செய்தார் வாழ்வில் உய்தார்,
கோயில்–பள்ளிக் கூடமாய் ஆனது–என்னும்
குரல்தனைக் கேட்பது எந்த நாளோ?

உத்தம சீலரும் உயர்ந்த சித்தரும்– என்றும்
உண்மைக்கு உயிர்விடும் தேசத் தொண்டரும்,
புத்தரைப் போல்பல அன்பு மனிதரும்–நீதிப்
புத்தகம் எழுதிடும் நல்எழுத் தாளரும்
சித்திரக் கலைதனை வளர்த்திடும் கலைஞரும்–ஆண்ட
சேரனைப் போல்பல வீரரும்; தீரரும்;
நித்திரை புரிந்திடா நல்லதோர் ஆட்சியும்–தமிழ்மொழி
நிலைத்தது போலிங்கு நிலைப்பதெந் நாளோ?

## இலங்கை தருகிறது இனிக்கும் செய்தி!

இனிமேலே ஆட்சிமொழி எங்கள் நாட்டில்
என்னஎனில் சிங்களமும் தமிழு மாகும்.
தினைத்துணையும் இதில்மாற்றம் இல்லை என்று
செப்பிவிட்டார் தென்னிலங்கை அரசாங் கத்தார்.
கனிச்சாறு, கற்கண்டுபோன்ற செய்தி
காதினிலே வீழ்ந்தவுடன் குளிர்ந்தோம், ஆனால்
இனிக்கின்ற இந்நிகழ்ச்சி நமது நாட்டில்
எப்போது நடக்குமென எதிர்பார்க் கின்றோம்?

### தமிழகம் தயங்குவதேன்?

தெளிந்துள்ள நறுந்தேனைப் போலி னிக்கும்
செந்தமிழை ஆட்சிமொழி யாய்அ மைச்சர்
குளித்தவுடன் உடைமாற்றம் போல்வி ரைந்து
கொண்டுவந்தன் றேஇருத்தல் வேண்டும்.! இன்னும்
வெளிச்சத்தம் கொடுக்கின்றார் நாட்டி னர்க்கு,
விரைவில்தமிழ் ஆட்சிமொழி ஆகு மென்று.
அளித்துவரும் உறுதிமொழி நமது நாட்டில்
அவசரமாய் நிறைவேற எதிர்பார்க் கின்றோம்.

*இதழ்: காவியம் 28–10–1955*

## கேரளமே கேள்!

### இன்னும் ஏன் புறம்போக்குப் பேச்சு?

பீர்மேடு, நெய்யாற்றங் கரையி னோடு,
பிரச்சினையி லேயிருக்கும் சித்தூர், நல்ல
நீர்பாயும் தேவிகுளம்; இந்த நான்கும்
நிச்சயமாய்த் தமிழர்க்கே உரிமை யாகும்.
ஆர்வந்து கேட்டாலும் விடையளிப்போம்
ஆதாரம் தந்திடுவோம் மேன னாரே!
ஓர்நாளும் விடமாட்டோம்; வேண்டு மென்றே
உரத்த குரல், புறம்போக்குப் பேச்சு வேண்டாம்?

### யாருக்குச் சொந்தம்?

பொருள்நிர்வா கத்துறையில் பார்த்திட் டாலும்
புகழ்பெற்ற சென்னைமா நிலத்தி னுக்கே
தரப்படவேண் டும் இந்தத் தாலுக் காக்கள்
தமிழ்நாட்டில் இயங்கிவரும் இயக்கம் யாவும்,
இருநூறு காரணங்கள் எடுத்துரைத்தும்
எங்களுக்குத் தான் இவைகள் சேர வேண்டும்
தரமாட்டோம் எனக்கூறும் கேர ளீயர்
சண்டித்த னஞ்செய்தால் என்ன அர்த்தம்?

## வேண்டுமா ஆயிரம் ஆதாரம்?

தேவிகுளம், பீர்மேடு, வட்டந் தன்னில்
செந்தமிழர் தான்அதிகம்; முண்டு டுத்தும்
கோவிந்த மேனனின் கூட்டம் அங்கே
குறைவாகத் தான்உண்டு! மேலும் அங்கே
தூவும் விதை நிலத்தோடு ஏலக் காயின்
தோட்டமெலாம் தமிழர்க்கே சொந்தம், வீணே
கூவுவதில் பதிந்துள்ள நோக்கம் என்ன?
கொத்திக்கொண் டேப்பமிடும் நினைப்பு தானே?

## இன்றே செய்க! இன்னே செய்க!

திரு–கொச்சி விவகாரந் தன்னைப் பேசி;
தினந்தன்னைக் கழிக்காமல், இன்றே, இன்றே
விரைவினிலே தக்கபரி காரந் தன்னை,
வெடுக்கென்று செய்தாக வேண்டும், இன்றேல்
எரிகின்ற நெருப்பின்மேல் எண்ணெய் ஊற்ற
எந்நேரம் ஆகும்? இதை ஆட்சி யாளர்,
சரிக்கட்டு வார்களென நம்பு கின்றோம்.
தமிழர்க்கே வெற்றிஎன எண்ணு கின்றோம்!

*இதழ்: காவியம் 4–11.1955*

# செந்தமிழன் கண்ணில் சுண்ணாம்பு தடவாதே!

பலநூறு மொழிகள் நிலவும் இந்திய
தேசத் தின்தே சீய மொழிகள்
பதினான் கென்று பண்டிதர் ஆட்சி
ஒப்புக் கொண்டு உள்ளது. அவற்றுள்
இந்தியோ, உருதோ—இனித்திடும் தமிழோ
ஒன்றினைக் காட்டிலும் ஒன்று சிறந்தது
என்பது இல்லை, என்ப தாவும்
அரசியல் சட்டம் அறிவித் துள்ளது.

அரசியல் உறுதி அப்படி இருந்திட
இச்சென் னைக்கு இருபத் தெட்டிலே,
புல்கா னின்வரப் போகிறார் அல்லவா?
அவருக் கிங்கே அளித்திட இருக்கும்
வாழ்த்து மடலின் வாசக வரிகள்
இந்தியில் அல்லது இரசிய மொழியில்
மட்டு மேஇருக் கட்டும் என்று
கட்டாய அறிக்கை விட்டு உள்ளது.

இந்தி நுழைக்கும் இந்திய அரசு.
என்ன நியாயம், எப்படிப் பொருந்தும்?
கோவில் அறிவைக் குழியில் புதைத்திடும்
சோவியத் மார்சலை, சுந்தர மனிதனை,

தமிழில் வாழ்த்தினால் தடுப்பா னேன் இதை?
இந்தியில் வரவேற் பிருக்கலாம் என்றால்
இந்திதான் சிறந்தது என்பதா கின்றது!

இந்திய ஆட்சிக் கிந்த நினைப்பு
இல்லாது போனால் இம்மா நிலத்தில்
வழங்கும் தாய்மொழி வாழ்த்தைத் தடுக்குமா?
இங்கே வந்திடும் இரசியத் தலைவரை
இருபத் தாறு எழுத்தினா லான,
ஆங்கில மொழியில் அகில இந்தியா
புகழ்ந்துபா ராட்டல் பொருந்தா தென்று
நினைப்பதில் கொஞ்சம் நியாயம் இருக்கலாம்?

ஆனால்,

செந்தமிழ் வழங்கும் சென்னை வந்திடும்
மார்சல் மனிதரை, வருக என்று
அன்புந் தமிழில் அழைப்பதா? அல்லது
மந்த இந்தியில் மார்சல் மணியே
என்று ழைப்பதா? எதுஇதில் நியாயம்?
அரசியல் சட்ட அறிவிப் புப்படி
நடந்திடும் எண்ணம் நாடாள் வோர்க்கு
நிச்சயம் இருந்தால் இச்சம யத்தில்
தமிழ்வர வேற்பைத் தடுப்பரோ இங்கே?

*இதழ்: காவியம் 18–11.1955*

# மோட்ச உலகு இங்கு வரவேண்டும்!

புகழ்சேர்த்ததுப் பழங்காலத் தமிழ மக்கள்
பொருளீட்டி வந்ததெல்லாம், எதற்கு என்றால்?
பகட்டாக வாழ்வதற்கோ, நிகரில் லாத
பணக்காரன் ஆவதற்கோ அல்ல; வாழ்வில்
வகையின்றித் தவிப்போர்க்கும்; இல்லை என்று
வாசல்வந்து நிற்போர்க்கும் உதவு வதற்கே!
பகையின்றி இவ்வுலகம் இருக்க வேண்டின்
பயனில்லை, பணப்பையை மறைப்ப தாலே!

முன்னோர்போல் அறஞ்செய்வீர்; அறநூல் கூறும்
முத்திக்கெல் லாம்வித்து அதுவே! முன்னர்
தென்னாடு வழங்கிற்று! ஈந்தோர் தேகம்
செத்தாலும் அவர்கீர்த்தி சாவ தில்லை.
தன்னிடத்தி லேவந்து கேட்போ ருக்குத்
தடையின்றித் தந்திடுவோன் தலைவி யோடு
அன்றாடம் காண்பானே இரவு இன்பம்;
அதனைவிட அதிகரித்த இன்பம் காண்பான்.

மண்ணுலக மாந்தர்களை, மோட்ச மென்னும்
மண்டலத்திற் கனுப்பாமல், அந்த மோட்ச
மண்டலத்தை யேஇங்கு கொண்டு வந்து
மானிடரின் முன்னிலையில் காட்ட வேண்டும்.
உண்மையிலே ஓர்ஊர்க்கு அழகு அவ்வூர்
உல்லாசப் பூங்காவா? வீடா? அல்ல!
பண்பாட்டில் ஒழுக்கத்தில் சிறந்த சான்றோர்
பலபேரை அவ்வூர்பெற் றிருத்தல் ஆகும்!

தவிக்கின்ற மக்கள்துயர் தீர்த்தி டாமல்
தலைவரெலாம் ஆளுக்கோர் கட்சி பேசி,
நவக்கிரகம் போல்திரும்பிக் கொண்டி ருந்தால்
நாட்டுக்கு விமோசனமா கிடைக்கும்? இன்றே,
அவசியமாய் எல்லோரும் ஓர்ம னத்தர்
ஆனால்தான் தன்னாட்சி பெறுதல் கூடும்
புவிக்குள்ளே, முன்போல முதன்மை பெற்றுப்
பொற்காலம் காணஇது ஒன்றே மார்க்கம்!

இன்றுள்ள நாமெல்லாம், சங்க நாளில்
இருந்திட்ட தமிழரைப்போல் வாழ்தல் வேண்டும்.
முன்போன்று தமிழகத்தை மாற்றிக் கல்வி
முதிர்ச்சிபெற வழிவகைகள் தேட வேண்டும்.
நன்மைக்கு நம்செயலைப் பிறந்த நாட்டின்
நலம்வேண்டி நம்மூச்சைத் தருதல் வேண்டும்.
குன்றைப்போல் தடைசெய்யும், சாதி பேதக்
கொடுமையிலாச் சமுதாயம் அமைத்தல் வேண்டும்.

(அழகுபுதுக்கோட்டையை அடுத்து இருக்கும்
கடியா பட்டியில், கடந்த மாதம்
இருபத் தாறில்இரா. நெடுஞ் செழியன்
அரிய வாயுரை ஆற்றினார். அந்தத்
திருக்குறள் விழாவின் தலைவர், திருப்பெரும்
குன்றக் குடியார், நின்றுபய னுடைய
நல்ல சொற்களால் நாட்டினர்க் கோருரைத்
தந்துளார் ஆதலின் தந்துளோம்,
கருத்துக் சரக்கைக் கவிதை யமைப்பிலே!)

*இதழ்: காவியம் – 9-12-1955*

# பண்டிதர்

### பணிக்கரின் உதடுகளாகிவிட்டார்!

மொழிவழி அமைப்பா செய்தீர்
மூலரே! நீர்அ மைத்த
குழுவினர் உம்மி டத்தில்
கொடுத்துள அறிக்கை யாது?
எழுவதற் காக வாநீர்?
இப்படிப் பேசு கின்றீர்!
முழுப்புகழ் பெற்ற நேரு
முதல்வரே; தெற்கே பேசும்.

### நீதிபதியே நிச்சயம் தோற்பீர்!

பிடிவாதம் பிடிக்கும் காலம்
இதுவல்ல, ஹிட்லர் போன்றோர்;
கொடிகட்டி ஆண்ட நாட்கள்
கொஞ்சந்தான்; சரித்தி ரத்தைப்
படித்துள்ளீர்; பம்பாய் தந்த
பாடமும் கற்றீர்! வீணே
முடிபோடும் வேலை வேண்டாம்;
முடிக்கும்நூல் அறுந்து போகும்!

## ஆசைக்கும் அச்சத்திற்கும் இடையே!

ஒருதலைப் பட்சம் காட்டும்
உளத்தினை உணர்ந்து விட்டோம்;
இருக்கலாம் உமக்கு ஆசை
கேரள நாட்டின் மீது.
இருபதில் பத்துப் போக
இருப்பது பத்து நாளே;
பெருமையை இழந்தி டாதீர்
பீர்மேட்டுத் தீர்ப்பின் மூலம்

*இதழ்: காவியம் – 10–2–1956*

# பண்டிதர் பார்க்கும் பொருள்

அலைவீசும் கள்ளிக்கோட் டைக்குச் சென்ற
அலகாபாத் மாவீரர், அவ்வூர்ப் பெண்கள்
உலக்கையினால் நெல்குற்றும் காட்சி தன்னை
உற்றுப் பார்த் துக்கொண்டே, நீண்ட நேரம்
சிலைபோல நின்றாராம்! பூரித் தாராம்!
தென்னாட்டில் மாண்டாரே புயலால்; அந்த
நிலைகாண வந்தாரா? வருவ தற்கு,
நெல்குற்றும், கண்காட்சி இருந்தால் தானே!

*இதழ்: காவியம் – 10–2–1956*

## பிப்ருவரி 20 - இல்

பீர்மேடு! தேவி குளந்தனை மீட்கப்
புறப்படு – புறப்படு! – அட
யார்வந் ததட்டினும் வைத்த முடிவை
நடத்திடு – நடத்திடு!
சொந்த உரிமைதனை வேண்டு மென்றே
பறிக்குறார் – பறிக்குறார்! – நாம்
அந்த உரிமையை மீட்டிட வேண்டாமே
அன்பனே! – அன்பனே!

### இதையுமா இழந்து விடுவது!

ஈரப்பனிமலை தன்னை இழந்திட்டோம்
முன்புநாம் – முன்புநாம்! – நமைச்
சேரும்வடமலை தன்னை இழந்திட்டோம்
பின்புநாம் – பின்புநாம்!

பச்சைப்ப சேலென்ற காடும் மலையும்
பிறருக்காம் – பிறருக்காம்! – நம்
லட்சியம் கைகூட இக்கணமே எழு
தோழனே – தோழனே!

## உரத்த குரலிடு உரிமை காத்திடு!

கண்ணுக்கு முன்னே திருட்டு நடப்பதைக்
கண்டவன் – கண்டவன் – கள்வன்
சிண்டைப் பிடிக்கவே ஓடிட வேண்டாமோ
சொல்லுவீர் – சொல்லுவீர்!

ஓரவஞ் சகரின் தீர்பைத் திருத்திடச்
செய்குவோம் – செய்குவோம்! நமைக்
கீரைவிதை என்றா எண்ணினர் – வீரத்தைக்
காட்டுவோம் – காட்டுவோம்!

## பொதுவேலை நிறுத்தம் செய்திடுவோம்!

வேலை நிறுத்தங்கள் மூலம் எதிர்ப்பை
விளக்குவோம் – விளக்குவோம் – நமை
ஆலைக்கரும் பென ஆளவந்தார் செயின்
செய்யட்டும் – செய்யட்டும்

*இதழ்: காவியம் – 17–2–1956*

# ஆணவத்தை அடக்கிய இருபது

இட்டதுதான் சட்டம்! எதிர்த்தால் இருபதிலே
சுட்டுவிடும் எங்கள் துரைத்தனத்தின் துப்பாக்கி.
தேவிகுளம் பீர்மேடு தேவை அவர்கட்கே,
கூவிப் பயனில்லை கோபத்தை மூட்டாதீர்!
நேரு மகான் தந்த நீதிதனை இங்குள்ள
ஈருளிகள் கூடி, எதிர்த்தால் விடுவேனோ—

-காமராசர்

சென்னை மதுரை திருச்சி குகைசேலம்
பொன்னி நதிவளைந்து போகின்ற தஞ்சாவூர்;
நீல அலைகள் நிலையாக ஆடுகின்ற
கோலக் கடலூர், கோவை நகர், வேலூர்,

திருவாரூர், தில்லை, திருக்குடந்தை போன்ற
பெருநகரில்—சிற்றூரில் பிப்ரவரி பத்திரண்டில்
சாலை தனிலுரிமைச் சத்தங் கொடுத்தபடி
வேலை நிறுத்தம் வினைபுரிந்தார்; வென்றிட்டார்.

நாட்டு உணர்ச்சி நமக்குண்டு என்பதனைக்
காட்டினார் அன்று, கடையடைத்து, ஆங்காங்கே.
பூக்கடைகள் இல்லை; புகைசுருட்டுக் கடையில்லை
ஈக்கள்வந் துட்கார்ந்தெ ழுந்திருந்து செல்லுகின்ற

சிற்றுண்டிச் சாலை; தேநீர் நிலையங்கள்;
விற்கும் உணவு விடுதிகள் அத்தனையும்;
அர்த்தால் நடந்திட்ட அன்று முழுநாளும்
வர்த்தகம் இன்றி மவுனம் அடைந்தனவே.

கட்டிளைஞர் அன்றைக்குக் கல்லூரி செல்லவில்லை.
பொட்டிட்டு மையிட்டுப் பூச்சுமையைத் தாங்குகின்ற
மாணவிகள் அன்று வரமறுத்தார் கல்லூரி,
ஆணவத் தீர்ப்பென் றறிந்து!

*இதழ்: காவியம் – 24–2–1956*

## காமராசரின் எதிர்காலம்?

எட்டிக்கனிபோல் கசந்திடும் தீர்ப்பினை
இங்கு அளித்து விட்டீர் – எம்மைக்
கொட்டகை ஆடுகள் என்றா நினைத்தனிர்
குட்டைக் கருத்தினரே!
வேலை நிறுத்தத்தின் மூலத்தினால் – எண்ண
வேற்றுமை காட்டி விட்டோம் – இங்கு
கூலி நினைப்பினி செல்லாது ஆட்சியின்
கூண்டு நொறுங்கி விடும்.!

### என்னமோ நினைத்தார்

எல்லைப் பிரிவினை இல்லை சரியாக
இப்பொழுதே திருத்தும் – என்றும்
நல்லமாட் டுக்கொரு சூடுஎன்பார் இந்த
நாட்டினை ஆள்பவரே!
தமிழ்நாடு என்றுநீர், சென்னையை மாற்றுவீர்
தட்சிணம் தைக்காதீர் – வட

## இமயம்–பொதியம் இருதுருவங்கள்

இமயம் பொதியம் தனித்தனி எப்போதும்
இரண்டையும் சேர்க்காதீர்
இவ்வாறு வார்த்தை விளக்கங்கள் தந்தனர்
இருபதாம் தேதியிலே – இனி
எவ்வாறு நம்காம ராசர் நடப்பு
இருந்திடப் போகிற தோ?

## தீர்ப்பைத் திருத்திடச் செய்வாரா?

காங்கிரஸ் மேலிடம் செய்த தவறினைக்
காட்டித் திருத்து வரா? இல்லை
மாங்கனி தீர்ப்பிது என்றே தமிழர்க்கு
வாயுரை ஆற்றுவாரா?

## ஆச்சாரியார் ஆகிவிடாதீர்!

செந்தமிழ் மக்கள் முடிவை மதித்தவர்
சிறப்பு அளிப்பாரா? – இல்லை
அந்தணர் ஆச்சாரி யாகி அவர்நிலை
அடைந்திடப் போகின்றாரா?

*இதழ்: காவியம் – 24–2–1956*

# செங்கோட்டையில்
# கேரளம் கணக்கெடுக்கிறது!

சென்னை அரசினர் சொன்னதின் பேரில்
காம ராஜரின் சம்மதத் துடனே,
சொங்கோட் டைதனில் தேங்காய் மூடிபோல்
பாதி தரப்படும் – கேரளத் திற்கு,
என்று தீர்ப்பு வழங்கிற் றல்லவா?
நான்சென்ஸ் நேரு நடத்தும் சர்க்கார்!

**டில்லி சொல்லித்தான் செய்கிறார்களாம்!**

பிடிவாதத் தீர்ப்பு பிப்ரவரி இருபதில்
என்ன ஆயிற்று? இங்குள தமிழர்கள்
அனைவரும் எதிர்த்தோம். அதனைக் கண்டு,
டில்லி நடு அரசு திடுக்கிட்டு – இதுபற்றிக்
கருத்தைச் செலுத்திக் கொண்டுள போதே;
திரு -- கொச்சி சர்க்கார், செங்கோட்டை தன்னில்
தங்கட் கெவ்வளவு தமிழ ரின்நிலம்
சேர்ந்திட வேண்டும் என்னும் கணக்கைத்
தயாரித்து அதனைத் தந்திருக் கின்றனர்!

## 59– சதுர மைல் அவர்கட்காம்!

நூற்று இருபத்து ஒன்பது சதுர
மைல்பரப் புள்ள வட்டாரம் தன்னில்,
ஐம்பத் தொன்பது சதுர மைல்நீளம்
கேரளாக் குரிய பகுதியாம்! தமிழர்
தாரை வார்த்துத் தந்திட வேண்டுமாம்!
டில்லி சர்க்கார் உத்தரவுப் படிதான்
திரு – கொச்சி சர்க்கார் 'சர்வே' குழுவை
அனுப்பி வைத்ததாம் அளந்து கணக்கிட!
கண்போன்ற நமது மண்ணின் பகுதியை
அவர்கள தென்று அளந்திடும் போது,
பாது காப்புப் படையொடு
பட்டாளம் நின்றதாம் அவர்பக் கத்திலே!

*இதழ்: காவியம் – 2–3–1956*

# ஆனாலும் நல்லவராம்!

## நேரு கூறினார்!

"முழுக்க முழுக்கத்" தவறாக வேநான்
நடந்துகொண் டிருக்கலாம்! நான்அறி வித்த
அந்தத் 'தீர்ப்பை' அமுல்செய் வதற்குத்
திண்ணமாய்ப் போரிட்டுத் தீருவேன் நிச்சயம்!

இவ்விதம் அமிர்த சரசில், காந்திக்
குல்லாய் நேரு கூறிய பின்னரும்
நமது பண்டித நேரு அவர்கள்
மக்களின் கருத்தை மதித்து நடப்பவர்
என்கிறார் காம இராசர் நம்மிடம்!
டில்லிக் காவடி சொல்கிறார் இப்படி!
மக்கள் ஒப்பிட மறுக்கும் எதனையும்
நிர்பந்தப் படுத்த மாட்டாராம் நேரு!

இன்னும் ஒருபடி மேலே செல்கிறார்
பண்டிதர் குணத்தைப் பறைசா ற்றும்இவர்.

## பதவிக் கனவு - இல்லை பகற்கனவு!

ஆச்சாரி யாநீர்? அல்லது பந்தா?
பெரும்ப தவியாவும் வடவர்க்கே குத்தகை
இதனை அறிந்தும் ஏனிந்த ஆசை
ஐயோ பாவம்! 'கனமே'
அவலை நினைத்து வாயைமெல் கிறீரே!

*இதழ்: காவியம் - 2-3-1956*

# சாயம் வெளுக்கிறது!

அமிர்த சரசில் நடந்த மாநாடு
சென்று திரும்பி சென்னையை மிதித்த
அமைச்சர் காம ராசரைக் கேட்டோம்.
ஐய, பச்சைத் தமிழரே! அமைச்சரே!
அமிர்த சரசில் நமதுபீர் மேட்டின்
பிரச்சினை குறித்துப் பேசி னீரா?
நியாயம் வழங்கி னாரா நேரு?
அல்லது அந்த அலகாபாத் பண்டிதர்
ஆணவ முடிவை ஆதரித் தீரா?
என்று இவ்விதம் எத்தனைக் கேள்விகள்
நாமும் கேட்டோம்!
நாடும் கேட்டது!

அதற்கு இந்த அழகர் சொன்னார்
தெட்சிணப் பிரதேசத் தீர்ப்பு குறித்து
மாநில மக்களின் முடிவு அறியாமல்
நானாக ஏதும் நவில்வதற் கில்லை,
என்று உரைத்து விட்டேன்– என்று!

நமது கேள்வி பீர்மேடு பற்றி
அமைச்சர் பதிலோ தெட்சிணம் குறித்து!

புதுவை தந்த புரட்சிக் கவிஞரின்
'எதிர்பா ராத முத்தம் என்னும்
கவிதை நூலிலோர் பண்டாரம் வருகிறான்;
கொக்கு வெள்ளைமேல் வேட்டிப்பண் டாரந்
தன்னைக் கதையில் வருவோன், கண்டு



அ. அ–5

பூங்கோதை நலமா? என்று கேட்டால்
பொன்முடி கடையில் அல்லவா இருக்கிறான்,
என்று உரைப்பான், அவனைப் போல
பதில்பகர்ந் தார்சென்ற பதினேழி லேஇவர்!

செவிட்டு மனிதர் சொல்லலாம் இவ்விதம்
கேட்கும் காதினர்க்கு அழகா குமாஇது?'
பின்னர் இதுபற்றிப் பேச்சு இல்லை.
ஆனால் நிதியமைச்சர் ஆரம் பித்துளார்.

காம ராசர் பேச வில்லை,
கனம்நிதி அமைச்சர் பேசிவ ருகின்றார்!
தலைஇ ருந்திட வால்ஆடு கின்றது
ஆடுதல் சரியா? அவ்விதம் ஆடி,

விடக்கூ டியவரா விருதை மனிதர்!
காம ராசர்தன் கருத்தை உரித்துப்
பேச வைக்கிறார், பேசா மல்இவர்
என்பது தானே, இதற்கு உட்பொருள்!

தூங்கும் மனிதரின் தொடையி லேதான்
கயிறு திரிக்கலாம்! ஆனால் இங்கு
அரசியல் தூக்கம் யாருக்கு மில்லை
இதனை அமைச்சர்கள் இன்றுணர்ந் திருந்தால்

தமிழரை மயக்கிட இந்த,
அரிச்சுவடித் தந்திரம் ஆரம்பிப்பரோ?

*இதழ்: காவியம் – 9–3–1956.*

## புதுக்கோட்டை இலக்கிய மன்றத்தில்!

### ஆராய்ந்து அறிவிப்பவன்!

எந்தப் பொருளையும் நன்கு ஆய்ந்து
தொடுத்து வகுத்து முறைப் படுத்தி
வெளியிடும் பண்பில் மிகவும் சிறந்தவர்
தரணி போற்றும் தமிழர் ஆவர்!

### வள்ளுவர் உரைக்கிறார்!

பாரினில் இன்பம் பலவ கைப்படும்!
இலக்கிய இன்பம் இவற்றுளே ஒரு வகை.
இன்பம் என்பது இதுதான்— என்பது
முடிவு கட்டிட முடியா விவாதம்
ஆயினும் இந்த அரும்பொருள் குறித்து
அறனெனப் பட்டதே இன்பம்— என்று
நமது வள்ளுவர் நவில்கிறார் குறளில்.

### தமிழிசைப் போர்?

செந்தமிழ் நாட்டில் சிலஆண்டு கட்குமுன்
தமிழிசை குறித்துத் தர்க்கம் நடந்தது!
இந்நிலை வேறு எந்த நாட்டிலும்
இல்லாத ஒன்று இதுபோல் பிரச்சினை
ஏற்பட்ட தாக எங்கேனு முண்டா?
என்று கேட்கிறேன் இங்குள உங்களை!

## தமிழன் இவன்தான்!

தமிழன் என்பவன் தன்மொழி இசையை
வெறுக்க மாட்டான்; வெறுக்கவே மாட்டான்!
தமிழையும், தமிழ்ப்பண் தந்திடும் சுவையையும்,
தடுத்து மறுப்பவன் தமிழனா? அல்லன்!
மதுரத் தமிழ்மொழி வளர்வதற் காகக்
கழகம் அமைக்கப் படுவதைக் காண்கிறோம்.
வேறுஎந் நாட்டிலும் இலாத
நெஞ்சை வருத்தும் நிகழ்ச்சி யாகும்இது

புதுக்கோட் டைஎனும் புகழ்நகர் தன்னில்
பத்தொன் பதிரண்டு ஐம்பத் தாறில்
திருக்குறள் கழகச் சார்பில் நடைபெற்ற
இலக்கியக் கூட்டம் ஒன்றில், திருச்சி

கி.ஆ.பெ. விசுவ நாதன்
உரையாற்றும் போது உரைத்தார் இவ்விதம்!

*இதழ்: காவியம் – 9–3–1956*

## ஆந்திரர் ஆசை நிறைவேறப் போகிறது!

அமைச்சர் நேரு, ஆந்திர மக்களின்
விசால ஆந்திர விருப்பம் நிறைவேற்ற
இசைவு தந்து இருக்கிறார்; இது, எதைக்
காட்டுகிற தென்றால், கார்ச்சனைப் பிரதமர்
சரணா கதியடைந் திருக்கிறார் என்பதே!

### ஆந்திரர்க்கு விசால ஆந்திரம் ஆனால் நமக்கு?

அடிநாள் தொட்டே அலகாபாத் பணடிதர்
இதனை அமைத்திடும் எண்ணம் உள்ளவரே!
இருப்பினும் இன்றுதான் தன்அரசு முடிவைத்
திட்ட வட்டமாய்த் தெரிவித் திருக்கிறார்.
இந்த விசால ஆந்திரம்; புதுமா
நிலங்கள் அமைக்கப் படுகின்ற போதே
அமைந்து விடுமென்று அறிவித் துள்ளார்.

இளம்மனைவி இதழ்போல் இனித்திடும் கரும்பு
தண்டித்தால் அன்றி சாறு தராது!
எள்ளும் அந்த இனத்தில் சேர்ந்ததே.
ஆந்திர அமைச்சர் ஆந்திரர் ஆசையைப்
பூர்த்தி செய்து வைக்கப் போகிறார்.

# அம்மி நகர்ந்தது!

பட்டாபி சீத்தா ராமையா போன்றோர்
அன்னார் பார்வையில் அடிக்கடி படுகிறார்!
சர்வேபள்ளி இராதா கிருட்டிணன்
இருந்திடும் போது எதுநட வாது?
நிலைமை அறிந்து நேரு நகர்ந்துள்ளார்
வடமும் அடியும் இன்றேல்,
தேரும், அம்மியும் தானே நகருமோ?

*இதழ்: காவியம் -- 9-3-1956*

## நாடாளும் அமைச்சரின் 'நாற்பது நிமிடங்கள்'

ஆவடி மாநாட்டில் ஐந்தே நிமிடம்
பேசிமுடித்த பெருமகன் – லயோலா
கல்லூரி தன்னில் – கனம்காம ராசர்
நாற்பது நிமிடம் நாக்கு நடுங்காது

பேசிமுடித்தாரம்! ஏசி முடித்தாராம்!
பயிலும் நாட்களில் பள்ளி மாணவர்கள்
அரசியல் கருத்தினை அறியலாம்; ஆனால்
கட்சி அரசியல் பூசலில் மட்டும்
தலையிடல் நிச்சயம் தகாது! தகாது!
அமைச்சரின் இதழ்களில் அவிழ்ந்த சொற்களிவை!

**கதிரவனைக் கரத்தால் மறைத்துப் பார்க்கிறார்!**

பிப்ரவரி இருபதில் செய்தபொது வேலை
நிறுத்தம் வெற்றி பெற்றதா என்று
அறிவுரை வழங்கும் அந்த மன்றத்தில்
அர்த்தாலைக் குறித்து நையாண்டி செய்துளார்.
ஒத்துஊதும் மித்திரன்; தினமணி
அத்தனை ஏடுகள் அளித்த செய்தியை
அமைச்சர் வாசிக்க வில்லையா? அல்லது
மந்திரிக்கு ஞாபக மறதி அதிகமா?
இந்த அர்த்தால் எதற்கு என்றால்
காங்கிரஸ் ஆட்சியை கட்டோடு எதிர்க்கவே!

## பதவி நாற்காலி என்கிறார் பரிகாசம் செய்கிறார்?

கூட்டு முயற்சி பூட்டிய வண்டிச்
சக்கரச் சுழற்சியின் சரித்திரம் என்ன
ஆயிற்று அவர்கள் அர்த்தால் இருபதில்?
பதவி ஆசை படிந்த மனத்தினரின்
குழப்பக் கூச்சல்! கூட்டு பேரம்!
பதவி நாற்காலி பறித்திடத் திட்டம்
போட்டுப் பார்த்தனர் ஓட்டை விழுந்தது!

## பேசக் கூடாத இடம் – அவர் நீர் குறைந்த குடம்

தமிழர் மலையாளிகள் தகராறு இங்கே
ஏதேனும் உண்டா? இதுவரை, ஆனால்,
அர்த்தால் கூட்டு அபாய அறிவிப்பை
மூச்சு விடாமல் முழக்குகிறார் இங்கே?
அர்த்தால் செய்ததே தவறாம்! அதற்கு
அர்த்தமே இல்லையாம் – அமைச்சர் உரைக்கிறார்.
அவரது உளறலை அறிவிக்க
மாணவர் மன்றந்தான் கிடைத்ததா! அந்தோ!

*இதழ்: காவியம் – 16–3–1956*

## அந்த வீரம் எங்கே போயிற்று?

மறத்தமிழ் நாட்டில் வடவர் ஆதிக்கம்
உள்ள தாக உரைக்கின்றார் ஓர்சிலர்
மறத்தமிழ் வீரத்தை வர்ணித்துக் கூறும்
இவர்கள் வடவர்க்கு ஏன்அஞ்ச வேண்டும்?
மறக்கற்பில் சிறந்த மங்கை கண்ணகிக்கு
வடவர் தலையில் வைத்து, அந்தச்
சுமையை இங்கே தூக்கிவரச் செய்தனர்
என்றால், அன்று இருந்த வீரம்
எங்குபோய் விட்டது இன்று இவர்கட்கு?
காங்கிரசில் வடநாட்டு ஆதிக்கம் இல்லை!
முதலாளி ஆதிக்கம் என்பதும் கிடையாது
இந்திய பூமியில் இன்று இருப்பது
மக்கள் ஆதிக்கம் அன்றி வேறில்லை;
இவ்வாறு பேசி இருக்கிறார் திருத்துறைப்
பூண்டியில் காம ராச பூபதி!

## பொய்யைத் தோல்வியாக்கும் பொய்!

வடநாட்டு ஆதிக்கம் தெற்கே இல்லையாம்!
வக்கா லத்து வாங்கிப் பேசுகின்றார்!
பூசுனைக் காயைச் சோற்றிலே மறைத்தால்
மறைந்து விடுமா என்பதை? அமைச்சர்
மறந்தே போனார் பதவிப் போதையில்
முதல் ஐந்தாண்டு திட்டம் வகுத்தனர்.
அத்தனை கனகரகத் தொழில்களும் வடக்கே!
ஆலைகள் அங்கே! அணைகட்டுத் திட்டம்.
முழுக்க முழுக்க முக்காடு போடும்
வடநாடு தன்னில்! வாழ்வு இங்கேது?
இரண்டாம் திட்டமோ, இன்னும் மோசம்
இப்படி நிலமை இருக்கையில் கேட்கிறார்
வடநாட்டு ஆதிக்கம் இங்கேது என்று

## புண்ணை ஆற்றுவதா?
## புடவையால் மறைப்பதா?

நேற்று முன்தினம், ஆரூரன் சர்க்கரைத்
தொழிற்சாலை தன்னைத் திறந்து வைக்கையில்
எல்லாத் தொழில்களும் வடநாட்டில் இருப்பதால்
புகார் சொல்வதில் பிரயோசனம் மில்லை!
இவ்விதம் கூறி இருக்கிறார் அங்கே!
வடக்கு தெற்கு வேற்றுமை தன்னை
எப்படி மூடி மறைத்த போதிலும்
நெருப்பில் வீழ்ந்த உப்பு போல
வெடித்தே தீரும் என்பதே
இவரே அறிந்து கொள்வார் விரைவிலே!

*இதழ்: காவியம் – 23–3–1956*

# முதலையைப் போல

பிணக்கை நீடித்துக் கொண்டு போவது
அறிவுச் சம்பவம் ஆகாது அதனால்,
அமைதியை மீண்டும் அமைத்திட வேண்டும்
சமாதா னத்தைத் தாபிக்க வேண்டும்.
இல்லை யானால் இதனால் நாட்டுக்குத்
தீமை ஏற்பட்டே தீரும் நிச்சயம்
மாகாணப் புனரமைப்பு மசோதா குறித்து
இவ்வாறு நிதியமைச்சர் இயம்பி இருக்கிறார்.
எனது கருத்தும் இதுதான் என்று
காமராசரும் காரணம் தருகிறார்.
ஆளவந்தார்கள் அளித்திடும் காரணம்
அத்தனைக்கும் நாம் அளித்துளோம் மறுவிடை
உரைத்த காரணம் உண்மைஎன உணர்ந்தும்
நேருவுக் காக நீதியை சாய்க்கிறார்.
அரசு கட்டில்ஏறி ஆள்ப வரிடத்தில்
நமது வார்த்தைகள் நமது குரல்கள்
பன்றிமுன் எறிந்த பவள மாயின!

## தமிழ்நாடு என்றால் லண்டனுக்குத் தெரியுமா?

சென்னையைத் தமிழ்நாடு எனத்திருத் துங்கள்
என்றால், காம ராசர் கேட்கிறார்
தமிழ்நாடு என்று பெயர் மாற்றி விட்டால்
தண்ணீர் கிடைத்து விடுமா? இல்லை,
பொருளாதார நிலைதான் உயருமா?
ஏனோ இந்த வீண்குரல் என்று!

மக்களின் முடிவை மதிக்காத சாக்கார், இது
ஆனால் மக்கள் ஆட்சிஇது என்று
நித்தம் உரைப்பதை நிறுத்துவ தில்லை!

இந்த நிலையில் செந்தமிழ் நாடு
இக்கட்டு நிலையில் இருந்து வருகின்றது
வெளிவர இருக்கும் மசோதா வினாலே
மூன்று கோடித் தமிழரின் உரிமைக்கு
அசைவும் ஆட்டமும் ஏற்பட்டு உள்ளது!

### இனி என்ன செய்யப் போகிறீர்கள்?

செந்தமிழ் நாட்டீர் செழுந்தமிழ் நிலத்தீர்
என்ன செய்திடப் போகிறீர் இதற்கு?
எம்.எல். ஏக்களே என்செயப் போகிறீர்?
மராட்டி மக்களின் வழியில்,
நடந்திட எண்ணமா? வளைந்திட எண்ணமா?
ஏது செய்திடும் எண்ணம் உங்கட்கே!

*இதழ்: காவியம் – 30–3–1956*

# நில வரம்புச் சட்டம்!

ஆடுகின்ற அலைகடலின் நீலத் தண்ணீர்;
ஆசைந்துவரும் இளங்காற்று; மூத்த காற்று;
சூடுபட்ட வெண்ணிலாவின் வெளிச்சம்; காலைச்
சூரியனின் அழகுமுகம், இவற்றை எல்லாம்,
மேடுபள்ளம் நிறைந்துள்ள புவியில் வாழ்வோர்
விலைகொடுத்துப் பெறுவதில்லை. ஏரைக் கொண்டு
பாடுபடும் நிலத்திற்கு மட்டும், காசு
பணங்கொடுத்துத் தான்ஆக வேண்டும், யாரும்!

விலைகொடுத்து வாங்குகின்ற பொருட்களுக்கு,
விவகாரம், பெருஞ்சண்டை பிறந்தே தீரும்!
நிலஉடமைப் பிரச்சினையைத் தீர்க்கா விட்டால்,
நிச்சயமாய் தொடர்சண்டை, வெட்டுக் குத்து,
கலகங்கள் வந்துகொண்டே இருக்கும், இந்தக்
கதைதெரிந்தும் சென்னைஅர சாங்கம், இன்னும்
தலைதன்னை ஆட்டிக்கொண் டிருப்ப தன்றித்
தக்கதொரு நடவடிக்கை எடுக்க வில்லை.

நேருபிரான், நிலவுடைமை வரம்பு பற்றி
நிறுத்தாமல் பேசுகின்றார்; காம ராசர்,
ஓரிரண்டு ஊர்களிலே இதைக்கு றித்து,
உதடுதனை அசைக்கின்றார் மாதா மாதம்!
காரியத்தில் நடந்ததென்ன! உழுது வாழ்வோர்
கண்டதென்ன புதுமாற்றம்? உங்கள் பேச்சைக்
காரியத்தில், காட்டுங்கள். நிலவ ரம்பைக்
கனவாக்கா தீர்காம ராச ஐயா!

*இதழ்: இலக்கியம் – 15–7–1958*

# ஊசி முனையில் உலகம்!

மக்களுக்கு விழிப்புணர்ச்சி வந்துவிட்ட காலம்
வரலாற்றை இரத்தத்தால் எழுதுகின்ற காலம்
முக்கால்நூற் றாண்டுக்கு முன்னிருந்த எண்ணம்,
முக்காடு போடட்டும்; ஓடட்டும் என்று,
கொக்கரித்துப் புதுப்புரட்சி செய்கின்ற காலம்!
கொள்கைக்கு உயிர்கொடுத்து வரும்இந்த நாளில்,
தக்கையைப்போல் செக்கையைப்போல், ஓர்மனிதன் வாழ்ந்தால்
தலைமீது நச்சென்று அடிக்கின்ற காலம்!

பெருந்தலைவர் நான்கைந்து பேர்ஒன்று கூடிப்
பேசப்போ கின்றார்கள் லெபனானை பற்றி
மருந்துவைக்கும் வைப்பாட்டி மனப்பான்மை மாறி,
மனைவிமனம் வல்லரசுக் குண்டாக வேண்டும்.
இரைதேடும் கூட்டத்தை; உணவுண்ணும் இனத்தை;
இயற்கைஉயிர் வரிசைதனைக் கொன்றிந்த உலகை,
நிருவாண மாக்கிவிட நினைக்கின்ற எண்ணம்,
நிச்சயமாய் மாநாட்டில் செத்தாக வேண்டும்.

எத்தனையோ மாநாடு; எத்தனையோ கூட்டம்;
எத்தனையோ தனிஅறிக்கை; எத்தனையோ பேச்சு
அத்தனையும் விழலுக்கு இறைத்திட்ட தண்ணீர்
ஆயிற்று; ஆனாலும் ஆகஸ்டு மாதம்,
முத்திரைகள் பெற்றுள்ள பெருந்தலைவர்கூடி,
முழுஉலக நன்மைக்கு வழிகோலு வாராம்!
தித்திக்கும் தேன்செய்தி என்றாலும், அங்கே,
தீர்மானம் நெருப்பானால், பகைதானே வளரும்?

*இதழ்: இலக்கியம் – 1–8–1958*

## துருப்பிடித்த அரசாங்கம்!

வடநாடு, குளிர்நாடு! போர்வை நாடு!
மண்டையிலே 'அது' நிறைந்த நாடு! நம்மைத்
தடவுவதற்கு – வழிவகையை வகுக்கும் நாடு!
தமிழ்மண்ணிற் பிறந்தோரே டில்லி ஆட்சிக்
கொடியின்கீழ் எதற்காகக் கையைக் கட்டிக்
கொண்டிருக்க வேண்டும்நாம், அடிமை போல?
அடிவாங்கும் மாங்காயாம் தெற்கு! நம்மை
அடிக்கின்ற செங்கல்லாம், வடக்கு நாடு!

இப்போது, வடநாடு நேரு கையில்;
என்றாலும், அந்நாளில் நமது கையில்!
இப்போது அதிகாரம், அங்கே? ஆனால்,
இனிப்போகப் போக, இனி அங்கே எங்கே?
இப்போது, தாய்ப்பாலில் வீர மில்லை
ஏனென்றால், நாட்டுணர்ச்சிப் பெண்டிர்க் கில்லை!
சப்பட்டை ஆகிவிட்டோம்; தேய்ந்து விட்டோம்;
தடுமாறித் தடுமாறி வாழு கின்றோம்!

துருப்பிடித்த அரசாங்கம்; வெப்பக் கண்ணீர்த்
தொடர்ச்சிதரும் அரசாங்கம்; அயோத்தி ராமன்
செருப்புக்கு மதிப்புதரும் 'பருத்தி' ஆட்சி
தேரிழுக்கப் பணங்கொடுக்கும் 'களிமண்' ஆட்சி
உருப்படுமா இந்நாடு? நம்மைப் பார்த்து
உதடுதனைப் பிதுக்கின்ற டில்லிசட்டம்?
நெருப்புக்கும் நீருக்கும் உறவாம்! தெற்கு
நித்திரைக்கு, இந்தியே, தா ராட்டுப் பாட்டாம்

சந்தனமா இந்திமொழி? இல்லை; கற்றோர்
சபைஏறத் தகுதிஉண்டா அதற்கு? மந்தி
இந்திக்குத் தமிழ்நாட்டில் என்ன வேலை?
எதற்காக வடநாட்டார் மூக்குப் பேச்சு?
முந்தாநாள் முளைவிட்ட இந்தி எங்கே?
முதிர்ந்தநிலாத் தமிழ்மொழியின் வரலா றெங்கே?
பந்துக்கு, உதைகொடுத்தால் ஓடும்; இந்திப்
பந்துதனை உதைப்பதற்கா ஆட்கள் இல்லை?

காவிரியின் நீர்போதும் நமக்கு! அந்தக்
கங்கைநதிக் கூட்டுறவு எதற்கு? கொத்துச்
சாவி அங்கே? நமதுவரிப் பணமும் அங்கே?
சட்டதிட்டம் அத்தனையும் வடவர் கையில்
மாவிலையை, அசோகமரத் திலையினோடு
வைக்காதீர், தைக்காதீர், என்று இங்கே,
கூவுகின்றோம் எதிர்க்கின்றோம். எங்கள் தெற்கைக்
கொத்தாதே என்கின்றோம், கேட்கவில்லை!

*இதழ்: இலக்கியம் – 15–8–1958*

# பண்டிதரும் பண்டாரமும்!

கடல்ஆடும் இலங்கைக்கும் உங்களுக்கும்,
கடுகளவு சம்பந்தம் உண்டா? மூட்டை
முடிச்சுதனை எடுத்துக்கொண் டோடிப் போங்கள்!
முடியாது, விடமாட்டோம், இங்கே நீங்கள்,
கிடைமாடு போல்படுத்துக் கிடந்திட் டாலும்,
கிளர்ச்சிபல செய்தாலும், தமிழர்க் கூட்டம்,
படைதிரட்டி வந்தாலும் அஞ்சோம், என்று
பண்டார நாயக்கா கூறு கின்றார்.

இலங்கையிலே வாழ்ந்துவரும் தமிழர், நாடு
இல்லாதோர், ஏனென்றால், தாவித் தாவி,
அலைபாயும் இலங்கைஅர சாங்கம்; அங்கு
அருந்தமிழர் வாழ்ந்திடச் மதிக்க வில்லை!
பலகாலம் ஆங்கிருந்த தமிழர் கட்குப்,
பாரதமும் இடங்கெடுக்க விரும்ப வில்லை!
கலைஞானி இவ்வாறு கூறு கின்றார்.
காஷ்மீர்பண் டிதநேரு பேசு கின்றார்!

பண்டாரம்— வெளியேபோ என்று தள்ள,
பண்டிதரோ வாராதே என்று சொல்லத்,
திண்டாடு கின்றார்கள் இலங்கை மண்ணில்
தித்திக்கும் மொழிபேசும் தமிழர். அங்கு,
மண்டையிலே அடிவாங்கிச் செத்துச் செத்து,
மண்ணுக்குள் புதைந்தவர்கள் போக; உப்புக்
கண்ணீரை விட்டபடி இருக்கும் அன்னார்க்
கதிஎன்ன? நேருசெய்யப் போவ தென்ன?

*இதழ்: இலக்கியம் – 15–7–1958*

# அண்ணாவும், சென்னை அரசாங்கமும்!

ஜனவரி மூன்றாம் தேதி,
சென்னையின் கடலோ ரத்தில்,
மனத்திலே மிதக்கும் பேச்சை,
வடித்திட வேண்டும் என்று,
கனைத்திடும் அரசாங்கத்தைத்
தி.மு.க. கேட்டபோது
பனிக்கடற் கரையில் பேச
அனுமதி தரவே இல்லை

எதற்காகத் தடுக்கின் றீர்கள்,
உரிமையை என்று கேட்டோம்,
அதற்கெல்லாம் பதிலை, இந்த
அரசாங்கம் கூற வில்லை.
எதிர்க்காதே; பேச வேண்டாம்;
என்றதே தவிர, நம்மை,
மதிக்கவே இல்லை. நாமும்
சட்டத்தை மதிக்க வில்லை.

அண்ணாவும், சொல்லின் செல்வர்
அவர்களும், பிறரும் கூடி,
விண்நீலம் காட்டு கின்ற
கடற்கரை தன்னிற் சென்று,
எண்ணத்தை விளக்கிக் கூற
எழுந்தனர். எழுந்த போதே,
தண்ணீரில், நிறுத்துகின்ற
கப்பல்போல் நிறுத்தி விட்டார்.

எதற்காகத் தடுக்க வேண்டும்?
இதுஎன்ன நீதி? ஞாயம்?
கதைபேசும் சென்னை ஆட்சிக்
காவலில் நமைவைப் பானேன்?
முதலியார் போலீஸ் சட்டம்
முட்டிடு வானேன் நம்மை?
அதிகாரச் செங்கல் வீட்டுக்
கழைத்ததேன் நம்அண் ணாவை?

பாண்டவர் வாழ்ந்த நாட்டுப்
பண்டிதர் வந்த தாலே,
கூண்டுக்குள் கிளிக ளாக
வேண்டுமா? இஃது என்ன,
தூண்டிமுள் சட்டம்? என்ன
துரைத்தனம்? சுரைக்காய் ஆட்சி?
தாண்டவம் ஆட வேண்டாம்
தவறான தீர்ப்பு வேண்டாம்?

தப்பிதம் செய்தி டாத,
தங்கச்சொல் அறிஞ ருக்குச்,
செப்டம்பர் மூன்றாம் தேதி
தரப்போகும் தீர்ப்பு என்ன?
செப்டம்பர், அண்ணாவுக்கு
சிறைஎன்றால், வீட்டில் தூங்கும்
உப்புக்குங் கூடக் கோபம்
உண்டாகும்; எதிர்த்தே தீரும்

*இதழ்: இலக்கியம் – 1–9–1958*

## தலை இல்லாமல், வால் ஆடுகிறது!

பாரதியார் கவியல்ல என்று முன்பு
பத்திரிகை தனில்எழுதி மறுத்த கல்கி,
பாரதிக்கோர் மண்டபத்தை எழுப்பி வைத்தார்!
பாரதியை மதிப்பதுபோல் காட்டுகின்றார்.
பாரதியா, ஆகாகா அவரா என்று
பாராட்டும் காரியமோ, ஓணான் வேலை!
பாரதியைப் புகழ்ந்திட்ட போலீஸ் மந்திரி
பக்தவச்ச லம்பேச்சோ நாக்கு 'நோட்டீஸ்!'

தொங்காத மீசைபார தியைப் பற்றித்
தொங்குகின்ற மீசைவைத்த மா.பொ.சிக்கு
அங்கிருக்க சந்தர்ப்பம் உண்டு என்றால்
அதனைவிட, பாரதிதா சனுக்குத் தெற்குத்
தங்கமணி பாரதியின் விழாவில் வந்து
தனித்தலைமை தாங்குதற்குத் தகுதி உண்டு!
செங்கரும்புக் கவிஅரசர் திருநாள் அன்று
சிலர்இல்லை! ஈக்கள் உண்டு! வண்டு இல்லை!

மானுக்குபின் மான்கள் செல்ல வேண்டும்?
வால்குழைக்கும் நாய்சென்றால் சிறப்பு இல்லை.
தேனுக்கு வேண்டுவது பாலா? வண்ணான்
துணிப்பிழிந்த தண்ணீரா? நிலவை ஏந்தும்
வானத்தில் பறந்தென்ன கொசுவின் கூட்டம்?
வல்லூறு இருக்கையிலே; பலபேர் கூடிச்
சேனையைப்போல் சென்றார்கள்; ஆனால் வாளைத்
திருப்புகின்ற வீரர்மட்டும் விழாவில் இல்லை.

மலைஇருக்க வேண்டாமா, குறிஞ்சி என்றால்?
வயல்இருக்க வேண்டாமா, மருதம் என்றால்?
தலைஇருக்க வேண்டாமா, உயிர் இருக்க?
தமிழ்க்கவியின் உயிர்நண்பர், நெல்லை யப்பர்,
நிலைஎன்ன? ஏன்அந்த விழாவில் இல்லை?
நீண்டகடல் புதுச்சேரிக் கவிஞர் எங்கே?
தலையாட்டி பொம்மைகளே, கனக லிங்கத்
தமிழ்ப்பறையன் ஏன்வந்து பேச வில்லை?

நிலத்திற்கு அழகுதரும் பொருள்இ ரண்டு;
நெல்ஒன்று, மற்றொன்று கரும்பு ஆகும்.
அலை அசையும் குளத்திற்கு அழகு, வண்ண
அரவிந்தம் என்னும்தா மரைப்பூ ஆகும்.
உலைதன்னில் அரிசிதனைப் போட்டி டாமல்,
உமிதன்னை அள்ளிவந்து போட்டு விட்டீர்.
கலைஅரசன் கவிப்பிச்சைக் காரன், இஃதைக்
கண்திறந்து பார்ப்பானேல், புகழு வானா?

பொதுக்கவிஞன்; புதுக்கவிஞன், நிகண்டு என்னும்
புத்தகத்தில் இருந்துவரும் சொற்கூட்டத்தைப்
பதிக்காமல், எல்லோர்க்கும் புரியும் சொல்லால்,
பாட்டெழுதிக் காட்டிவந்த பார திக்குத்
துதிவேண்டாம், அவன்போலி அறிஞன் அல்ல!
சுயவிளம்ப ரத்திருநாள், நடத்த வேண்டாம்?
விதைத்தவர்கள் அறுக்கட்டும்; அடுத்த ஆண்டு,
விழாவேனும், கவிஞர்க்கு இடந்த ரட்டும்.

*இதழ்: இலக்கியம் – 15–9–1958*

# பரிகாரம் செய்யாவிடில்

காடுகள் கொன்று நாடாக்கிப் – பல
கட்டிடம் மாளிகை கட்டிக் கொடுத்தோம்
மாடு இழுத்திடும் ஏரால் – வயல்
மண்ணைத் திருத்திநல் தானியம் தந்தோம்
ஆடும்தறி அதனாலே –மக்கள்
ஆசைப்படும் துணிமேடைகள் தந்தோம்
ஓடு எடுத்தலை கின்றோம்! – காது
ஓலையைப் போல மனம் சுருள்கின்றோம்.

கட்டி மலையைப் பிளந்தோம் – பூமி
கர்ப்பத்தில்உள்ள பசும்பொன் எடுத்தோம்.
வெட்டியதால் உருவான – குளம்
வீதிகள், பாதைகள், உண்டாக்கி வைத்தோம்.
சுட்டும்விழி நிறங் காட்டும் – கடல்
சுற்றித் திரிந்திடக் கப்பல்கள் செய்தோம்.
கொட்டும் மழைநீரைப் போல– கண்ணீர்
கொட்டுகின் றோம்பசித் துன்பத்தினாலே.

இரவின்பனி, பகல்வெய்யில் –புயல்
இடிமழை நோய்கள் தருந்துயரோடு,
தெருவினில் கையேந்து கின்றோம்– இந்தத்
தேசத்தில் பட்டினிப் பூச்சியா கின்றோம்!
மரங்களைப் போல்நனைகின் றோம்–வீதி
மண்ணில் படுத்திரு கைபோர்த்து கின்றோம்.
பரிதாப மன்றோ இக்காட்சி! பரி
காரம் செய்யா விடில்இது என்ன ஆட்சி!

# சுளை போன்ற தீ பரவட்டும்!

எதற்காக இன உணர்ச்சி? நாடும் வீடும்
எதற்காக? ஆட்சிமொழி, சட்ட திட்டம்
எதற்காக? அவரவரின் உரிமைக் காக
என்றறிக! அவ்வுரிமை பறிக்கப் பட்டால்,
எதற்காகத் துதிக்கையெனத் தொங்கும் வாழ்க்கை
இருட்டறையில் ஓவியங்கள் இருக்க லாமோ?
முதற்காதல், முதல்முத்தம் என்ப தெல்லாம்
முழுவுரிமை பெறாதவரை இனிப்ப தில்லை!

முடிவேந்தர், மூவேந்தர் ஆண்ட நாளில்
மூத்ததமிழ் பூத்ததமி ழாகி, வீரக்
கொடிவேந்தர் மன்றத்தில் புலவ ரோடு
கொலுவிருந்த தென்பார்கள்! இன்றோ இந்தி
தடியேந்தி அரசாள வந்து விட்டாள்.
தமிழ் மகனே! மூக்குமொழிக் கடிமையாகி
மடியேந்தி நீவாழ நினைத்தால், உன்னை
மற்றவர்கள் கோழையென்று கூறிடாரோ?

பரவட்டும் தமிழர்புகழ்! தமிழர் மேன்மை
பரவட்டும் திசையெட்டும்! வைய மெங்கும்
பரவட்டும் தமிழ்ப்பண்பு! தமிழர் ஆட்சி
பரவட்டும் செங்கதிரோன் வெளிச்சம் போல!
பரவட்டும் திருக்குறளின் எண்ணம்! எங்கும்
பரவட்டும் திருப்புகழின் வண்ணம்! நன்கு
பரவட்டும் பழுத்தபலாச் சுளைத்தீ; இந் தீ
பரவட்டும் பரவட்டும் என்பான் வீட்டில்!

# நல்ல தீர்ப்பு வேண்டும்!

நீதிதான் வேண்டும்; உப்பு
நீர்சூழ்ந்த கட்சுத் தீவு
சேதுநாட் டரச ருக்குச்
சொந்தமா? அந்தத் தீவு
ஓதநீர் இலங்கை நாட்டுக்
குரியதா? இதனைப் பற்றி
மோதிலால் பேத்தி இந்த்ரா
முடிவெடுத் தாக வேண்டும்

நெய்படும் சோற்றில், நஞ்சின்
நிழல்படு மாயின், சாவின்
கைபடும்! அதுபோல் நீதி
கறைபடின், உண்மை சாகும்!
பொய்படும் புராண மாகிப்
போகாமல், தீவுத் தீர்ப்பு
மெய்படும் குறள்போல் ஆக
வேண்டுமென் றெதிர்பார்க் கின்றோம்!

இதழ்: சுரதா – 15–3–1968

# உணர்ந்தால் ஒற்றுமை வரும்!

எங்குமே பொறுமை இல்லை
ஏனென்றால்? நாட்டில், வீட்டில்
எங்குமே அமைதி இல்லை
ஏனென்றால், உலகில், ஊரில்
எங்குமே நிதானம் இல்லை
ஏனென்றால்? வடக்கில், தெற்கில்
எங்குமே நேசம் இல்லை
ஏனென்றால்? உண்மை இல்லை!

நீதிநூல் குறைந்து, தீய
நிகழ்ச்சிக்கே ஊக்க மூட்டும்
வீதிநூல் வளர்வ தாலும்;
வேற்றுமை விளைவ தாலும்;
சாதிநூல் பேச்சும்; காமச்
சண்டையும் தடிப்ப தாலும்
ஆதிநாள் அமைதி, ஏதும்
அகிலத்தில் சிறிது மில்லை!

படிப்பதற் காக உள்ள
பருவத்தைக் கோபங் கொண்டு
துடிப்பதற் காக மாற்றத்
தொடங்கினால்? தொழில்செய் வோரும்
அடிப்பதற் காக வாழ்வை
அமைத்திட முயன்றால்; எல்லாம்
ஒடிப்பதற் காகச் செய்யும்
ஊக்கமாய் மாறும் கண்டீர்!

*இதழ்: சுரதா – 1-4-1968*

## புகழ் கொண்டு வருவார்!

பசைகொண்ட படிப்பும், நல்ல
பதங்கொண்ட பேச்சும் இல்லார்
வசைகொண்டு வருவார். சென்னை
மாநில அமைச்ச ராகித்
திசைகொண்ட உலகம் சுற்றச்
சென்றுள்ள அறிஞர் அண்ணா
இசைகொண்டு வருவார், தென்றல்
இடங்கொண்ட தமிழ்நாட் டிற்கு!

குலைக்கனம் கொண்ட தென்னங்
குறும்பையைப் போன்றோர்க் கெல்லாம்
தலைக்கனம் வருமே யன்றித்
தகுதிகள் வருவ தில்லை!
இலக்கண வாழ்க்கை வாழும்
இனியவர் திரும்பி வந்தால்,
மலைக்கனம் கொண்ட நாடு
மற்றுமோர் படிமே லோங்கும்.

*இதழ்: சுரதா – 15-4-1968*

# ஊதாரிகளுக்கு உதவிப் பணமா?

தப்பாது மன்னர்க் கெல்லாம்
தனித்தொகை தருவ தற்கு,
அப்போது வாக்க ளித்தோம்,
அவ்வாறே வழங்கு கின்றோம்.
எப்போதும் தருதற் கில்லை
என்கின்றோம்! இதனைக் கேட்டுப்
பொய்ப்போர்வை மன்ன ரெல்லாம்
புதுக்கோபம் காட்டு வானேன்?

வயிரக்கல் மன்னர்க் கென்ன
வறுமையா? அவர்தம் வாழ்வில்
துயரத்தை ஒருநா ளேனும்
சுவைபார்த்த துண்டோ? கட்டித்
தயிரொத்த நிலவின் சோதி
தாவிடும் பசும்பொன் மேடை
உயரத்தில் இருப்பார்க் கின்னும்
உதவியேன் புரிதல் வேண்டும்!

வேருக்குத் தண்ணீர் ஊற்ற
வேண்டுமே யன்றித் தொங்கும்
தாறுக்கும் இலைக ளுக்கும்
தண்ணீரேன்? உதவ வேண்டின்,
கோரிக்கை நிறைவே றாத
குழுவினர்க் குதவ வேண்டும்.
யாருக்கோ உதவி செய்தால்
யாரிதை ஏற்றுக் கொள்வார்?

*இதழ்: சுரதா – 1–5–1968*

# சுற்றும் உலகைச் சுற்றி வந்தவரே!

ஒருதிங்கள், நீல வானில்
உலாவர, முதல்வ ரேநீர்
ஒருதிங்கள், மேலை நாட்டில்
உலாவந்தீர். நீங்கள் இல்லா
ஒருதிங்கள், அமைச்சர் கட்கும்
ஊருக்கும் ஊமைத் திங்கள்!
ஒருதிங்கள், அங்கே நீங்கள்
உதட்டினைத் திறந்த திங்கள்!

முற்றிய மலையும் குன்றும்
மொய்த்தநன் னாக நாட்டைச்
சுற்றிய சோழ மன்னன்
தூயசெந் தமிழ்நாட் டிற்கு,
வெற்றிலை கொண்டு வந்தான்.
வெளிநாடு சென்று நீரோ
வெற்றியைக் கொண்டு வந்தீர்
வெல்லுஞ்சொல் அங்கே தந்தீர்!

புதியவர் நட்பைப் பெற்றும்
புகழ்கொண்டோர் உறவைப் பெற்றும்
முதியவர் வாய்ச்சொல் கேட்டும்
முத்தமிழ் விதைத்தும் வந்த
அதியமான்! கல்வி மானே!
அரசியல் ஒளிவின் மீனே!
உதயமே! வருக! மூவர்
உலாநூலே வருக வாழ்க!

*இதழ்: சுரதா – 15–5–1968*

# நண்டு வாகனம்!

நாட்டுக்கு நாடு மோதல்
நடப்பதை அறிவோம். ஒவ்வோர்
வீட்டுக்கு வீடு மோதல்
விட்டதா? ஆளும் கட்சி
ஏட்டுக்கும் பிறர்ஏட் டுக்கும்
எப்போதும் மோதல்! கொக்கிப்
பூட்டுக்கு மோதல்! இன்றோ
புகைவண்டி மோதல் எங்கும்!

சுகவண்டி பலரை இங்கே
சுடுகாட்டுக் கனுப்பி வைத்த
தொகைவண்டி, கரியைத் தின்னும்
தொடர்வண்டி இனிமேல் இங்கே
பகைவண்டி ஆகா வண்ணம்
பார்த்துக்கொள் கின்றோம் என்று
புகைவண்டி அமைச்ச ரான
பூனச்சா கூறு கின்றார்!

தண்டவா ளத்தில் ஓடும்
தனிப்புகை வண்டி சாய்ந்தால்
முண்டவா முடியும்? வண்டி
மோதலுக் கெல்லாம் ஆள்வோர்
வண்டவா ளந்தான் அன்றி
மற்றென்ன? இவ்வா றாயின்,
நண்டுவா கனத்தி லேனும்
நாமேறிச் செல்லல் நன்றாம்!

*இதழ்: சுரதா – 15–5–1968*

## பதவிப் பந்தல்

பருவங்கள் மாறி வந்தால்
பயனுண்டு, வகுத்த கொள்கை
உருவங்கள் மாறி னாலும்
ஒப்பலாம், பதவிக் காகப்
பருவம்போல் கட்சி மாறல்
பச்சேந்தித் தனமே யாகும்
புருவங்கள் மீசை யாகிப்
போகுமோ? போகா தன்றோ?

எள்நோக்கும் செட்டி போலும்;
இருள்நோக்கும் கள்வன் போலும்;
கள்நோக்கும் குடியர் போலும்;
கண்நோக்கும் வேசி போலும்;
உள்நோக்கம் இருக்க, மேடை
உபதேசம் செய்வ தெல்லாம்
முள்நோக்கி நம்மைத் தள்ளும்
முயற்சியின் பயிற்சி யாகும்!

இடுப்பிலோர் கையும், செவ்வாய்
இதழிலோர் விரலும் வைத்து
நடிப்பவள் தோற்கும் வண்ணம்
நடிப்பவர்க் கமைச்சர் வேலை
கொடுப்பதே தவறு! நாட்டின்
குறைபல குறைய வேண்டின்
அடிக்கடி கட்சி மாறும்
ஆட்களை நீக்க வேண்டும்.

இதழ்: சுரதா – 1-6-1968

# முகமூடி முயற்சி!

எப்படி யேனும் மீண்டும்
இந்தியை நுழைக்க வேண்டிச்
செப்படி வித்தை செய்யும்
தில்லியே இதைக்கேள்! நீரில்
முப்படி உப்பைக் கொட்டின்
முடிவென்ன ஆகும்? அந்த
உப்பதில் கரைந்து போகும்!
உணர்ந்துநீ நடந்து கொள்க!

வீடுகள் எதிர்த்தும்; மக்கள்
வேகமாய் எதிர்த்தும்; செய்தி
ஏடுகள் எதிர்த்தும்; நாங்கள்
எதிர்க்கையில்; தலையை ஆட்டி
மாடுகள் கூட இங்கே
மறுத்திடக் கண்டும்; இந்தி
ஆடுகள் மீண்டும் வந்தால்
ஆபத்தாய் முடியும் கண்டாய்!

மந்திக்கு வேலை என்ன
மஞ்சத்தில்? விரட்டப் பட்ட
இந்திக்கு வேலை என்ன
இவ்விடம்? மீண்டும் இந்தி
சந்திக்க வந்தால்; தொல்லை
தந்திட முயன்றால்; இந்திப்
பந்தத்தை அணைக்கத் தண்ணீர்ப்
பாத்திரம் உண்டு கண்டாய்!

*இதழ்: சுரதா – 15-9-1968*

# கலைஞரின் ஆட்சி கவிதைபோல் வாழ்க!

அரசியல் நாட கத்தில்
அலிகூட வீர னாவான்
இருவரில் ஒருவர் வேண்டும்
எனும்நிலை வந்தால், "நானே
வரிசையில் முதல்வன், என்னை
மதியுங்கள்" என்ப தெல்லாம்,
அரசியல் அறிவுப் பஞ்சம்
உடையவர் வார்த்தை யாகும்!

அங்கொரு காம ராசர்
அவரை நாம் அறிவோம். நாட்டில்
இங்கொரு கலைஞர் மு.க.
இவரையும் அறிவோம். ஒன்று
சிங்கமாம்! மற்றொன் றென்ன
தெரியுமா? புலியாம்! எங்கள்
தங்கமாம் கலைஞர் இன்று
தமிழ்நாட்டை ஆளு கின்றார்!

தலைவரின் தலைவர் அண்ணா
சாய்ந்தபின், இந்த நாட்டின்
நிலைஎன்ன? என்றி ருந்த
நேரத்தில் பதவி ஏற்று,
மலைஎன விளங்கு கின்றார்!
மதயானைத் தந்தம் போன்ற
கலைஞரின் ஆட்சி, என்றன்
கவிதைபோல் சிறந்து வாழ்க!

*இதழ்: சுரதா – 1–4–1969*



அ·அ- 7

# மீண்டும் அங்கே!

மறுபடி புதிய தேர்தல்
வருவதால், தலைவ ரெல்லாம்
சுறுசுறுப் புடனே நாட்டில்
சுற்றுலா தொடங்கி யுள்ளார்.
இறைவனே சிண்டி கேட்டாய்
இங்குநின் றாலும், வெற்றி
அறுவடை தன்னை நீங்கள்
அவரிடம் தரக் கூடாது.

நாடாளு மன்றத் திற்கு
நமதணி சென்றால் அன்றிக்
கோடானு கோடி மக்கள்
குறைதீர வழியே இல்லை!
ஆடாத ஆட்ட மெல்லாம்
ஆடிய அவர்க்கு நீங்கள்
போடாதீர் வாக்குச் சீட்டைப்
புளுகுவார் நம்பா தீர்கள்!

மன்னரின் மானி யத்தை
மறுபடி தரத்தான் வேண்டும்
என்றுநம் மிடத்தில் கூறும்
இவர்களை ஆள விட்டால்,
குன்றிப்போய் விடுவோம்; நாடே
குடைசாய்ந்து போகும்; நீங்கள்
நன்றிதை உணர வேண்டும்
நமதணி வெல்ல வேண்டும்!

இதழ்: சுரதா – 1–12–1970

# மாநிலத்தில் சுயாட்சி!
# மத்தியில் கூட்டாட்சி!!

பத்திரிகை படிப்போரே! பட்டங்கள்
பெற்றோரே! பழமை யான
ஒத்திகை போல் இயங்கிவரும் ஆட்சிமுறை
மாட்சிபெற ஒன்று சொல்வேன்;
மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்தில்
சுயஆட்சி மலரு மாயின்,
எத்தனையோ பிரச்சினைகள், குழப்பமெனும்
கொப்புளங்கள் இறந்து போகும்.

சுவரிங்கே! சுண்ணமங்கே! பெட்டியிங்கே!
சாவியங்கே! தொடர்ச்சி யான
தவமிங்கே! நமக்குவரம் தருபவர்கள்
அங்கேயாம்! சரியாய்ச் சொன்னால்,
எவரங்கே இருந்தென்ன? மத்தியிலே
நம்மவர்கள் இருந்தா லன்றி
அவரவரின் மாநிலத்தைச் செழித்தோங்கச்
செய்திடுதல் அரிதே யாகும்.

அதிகாரம் வேண்டுமென்று நெடுநாளாய்க்
கேட்கின்றோம். ஆங்கி ருப்போர்
அதி–காரம் மிளகாயில் இருக்கின்ற
தென்கின்றார் ஆத லாலே;
பொதுவாக நாம்நம்மைக் காப்பாற்றிக்
கொள்வதற்கோர் புதிய திட்டம்
இதுவாகும் என்பதனால் இத்திட்டம்
நமக்கெல்லாம் ஏணி யாகும்.

இதழ்: சுரதா – 1-3-1970

## ஆலயத்தில் அவர்களுக்கே இடமா?

வாயிறந்த மௌனந்தான் சிறப்பென்றெண்ணி
வாழ்ந்துவந்த முன்னோர்கள், ஆங்காங் குள்ள
கோயிலிலே பூசைசெய்ய வேண்டி, பிர்ம
குலத்தினரை அர்ச்சகராய் நியமித் தார்கள்.
ஆயிலியம், மகம், பூரம் என்றே சொல்லும்
அர்ச்சனையில் மாறுதல்கள் வேண்டும் என்றால்
மாயமனம் கொண்டவர்கள் மறுக்கின் றார்கள்.
மாநாடு தனைக்கூட்டி எதிர்க்கின் றார்கள்!

தேரடியும் ஊரடியும் ஒன்று சேரும்
திருவல்லிக் கேணியிலே சென்ற வாரம்
மாரியம்மன் கோயிலில் வாழ் குருக்கள், பக்தி
மாநாட்டில், அர்ச்சகரின் கூட்டம் தன்னில்;
வீரியமாய்ப் பேசியுள்ளார்—தலைமை தாங்கி!
வேறுசிலர் அர்ச்சனைகர்ச் சனைசெய் துள்ளார்
சீரியதாய் நாம்கருதும் கருத்தை, ஆங்கே
தீர்மானத் தின்மூலம் எதிர்த்தும் உள்ளார்.

சக்தியொடு சிவபெருமான் அமர்ந்தி ருக்கும்
சன்னதியின் கருவறைக்குச் சென்று நீங்கள்
இத்தனைநாள் மணியடித்துப் பூசை செய்தீர்?
எங்களுக்கும் மணியடிக்கத் தெரியும்! உங்கள்
குத்தகையை மாற்றுங்கள் என்று சொன்னால்,
குருக்களெல்லாம் எதிர்ப்பானேன். இதனை தெய்வ
பத்தியிலே பழுத்தவர் போல் பேசும் அந்தப்
பரம்பரைக்கு மட்டுந்தான் உரிமை உண்டா?

வழிவழியாய் அர்ச்சனைகள் செய்து கொண்டு
வருகின்ற எங்களொடு பிறரைச் சேர்த்தால்
குழிகுழியாய்ப் போய்விடுமே பக்தி என்று
கூறுகின்ற அர்ச்சகரே! புடவை தன்னை
இழை இழையாய் எதற்காகப்பார்க்கின்றீர்கள்
எல்லோரும் ஓரினந்தான்! இனியும் நீங்கள்
பிழைபுரிய விடமாட்டோம்! பூனை இன்றேல்
பெருச்சாளி வைத்ததுதான் சட்ட மாகும்!

மதிதிரட்டி ஆராய்ந்து பார்த்திடாமல்,
மாற்றத்தை வரவேற்க வழிசெய் யாமல்
நிதிதிரட்டி நீதிமன்றம் தன்னில் ஏறி
நிச்சயமாய் இதையெதிர்ப்போம் என்கிறீர்கள்.
நதிதிரட்டும் புதுவெள்ளம் ஓடி வந்தால்,
நான்கைந்து குடிசைகளின் நிலையென் னாகும்?
எதுதிரட்டி எதிர்த்தாலும், எதிர்ப்பென்கின்ற
இருமலுக்கு புதுச்சட்டம் மருந்தாய் மாறும்!

இதழ்: சுரதா – 1-2-1970

# சிலை வைப்போம்!

முழங்காலைத் தொடுகின்ற கூந்தல் உள்ள
முனிவர்களின் மனைவியரைக் கூடும், கள்ளப்
பழக்கமுள சிவன்மீது பாடல் பாடும்
பண்டாரப் புலவர்களால்; பிறரால்; சத்து
இழந்திருந்த செந்தமிழை; முறுக்கு ஏறும்
எண்ணத்தால், கற்பனையால், முறையால், மீண்டும்
எழுந்திருக்க வைத்துளபா ரதிதா சன்போல்
இன்னொருவர் இந்நாட்டில் இப்போ தில்லை!

மடையரெல்லாம், ஆரியர்கள் புனைந்து வைத்த
மதத்திற்கும், கடவுட்கும் தாசர் ஆனார்.
முடிவேந்தர் பாராட்டைப் பெற்ற கம்பர்:
முன்னாளில், திருவொற்றி யூரில் வாழ்ந்த
வடிவழகி, வேல்விழியாள், மென்கு ரும்பை
வல்லிஎனும் தாசியிடம் தாசன் ஆனார்.
எடுத்திடடா கொலைவாளை – என்று சொன்ன
இவரோ ஓர் அறிஞர்க்கு தாசன் ஆனார்!

வெடித்தவுடன் விரைந்தோடும் ஆம ணக்கின்
விதைஎன்றால், பாரதிக்குப் பொருந்தும். கீழே
அடித்தவுடன் மேலெழும்பும் பந்து என்றால்,
அது புரட்சிக் கவிஞருக்கே பொருந்தும். வாழ்வில்
இடர்பட்ட பாரதியும் இவரும், யாப்பின்
இணைமோனை போன்றவர்கள். தமிழைக் காக்கத்,
தொடுத்துநமக் களித்துள்ள இருவர் பாட்டும்,
சொத்தைவரிக் கூட்டமல்ல. கருத்தின் சத்தம்!

பெண்டீரை விடமென்றும், வேம்பு என்றும்,
பாடியவர் பட்டினத்தார். பெண்டீ ரைப்பூச்
செண்டென்றும், செங்கரும்புத் துண்டு என்றும்.
செப்புமிவர், பட்டினத்தார் பகைவன். தெய்வச்
சண்டையிட்ட தேவாரப் பார்ப்பான், ஞான
சம்பந்தன் கொள்கைதனை, வாட்டி வதைத்த
முண்டாசு பாரதியின் தொண்டன்! சாவின்
முடிவுள்ள மணல்உலகின், கீர்த்தி சேர்த்தோன்!

உவமைக்கு இடைக்காடன். அழுத்த மாக
உரைப்பதிலே மணவாள தாசர். எண்ணம்
தவறென்றால், அங்கேயே, அந்தப் போதே
தடுக்கும் உயிர் நக்கீரன். வெண்சி ரிப்புச்
சுவையோடு எழுதுவதில். நல்லூர்–ராமச்
சந்த்ரகவி ராயருக்கு இவர்தான் ஈடு,
சிவன்திருமால் நடத்தைதனைக் கவியால், கிண்டல்
செய்வதிலே இரட்டையரில் ஒருவர் ஆவர்.

சதிசெய்யும் ஆரியத்தை, மதத்தைப் பற்றிச்
சத்தமிட்டுத் தினந்தோறும் பேசிப் பேசி
எதிர்ப்பினிலே வளர்ந்துள்ளோர், இந்த நாட்டில்
ஏழெட்டு பேர்உண்டு. எனினும், அந்த
மதிப்புள்ள மனிதர்களுள் இவரே, மன்னர்
மாணிக்கம். மற்றவர்கள், பவளம், முத்து.
உதிக்கின்ற செங்கதிரோன், இவர்தான் என்றால்
ஒளிவிளக்குப் பேர்வழிகள் எதிர்நிற் பாரா?

வேரடிக்கு வாருங்கள் அத்தான், காதல்
வினைபுரிவோம் என்றிடுவாள் மங்கை. வேம்பின்
வேரடிக்கு வாருங்கள், நீங்கள் வேண்டும்
வரம்பெறலாம் என்றுபூ சாரி சொல்வான்
வேரடிக்கு வாருங்கள் என்பார். பந்து
விளையாட சிறுவரெலாம். இவரோ, காய்ந்த
வேரடுக்கி வாருங்கள், தீவ ளாப்போம்
வேண்டாத மதநூலை எரிப்போம் என்பார்!

ஓம்ரீங்யங் எனக்கூறி சுருட்டு வோரை,
உதைத்தால்தான் சரிப்படுவர். எதற்கும், நாட்டில்
ஆம்போடும் ஆசாமி, முன்னேற் றத்தை
அடைக்கின்ற மரக்கதவு! ஆக்கித் தின்னும்
சேம்பென்று நினைக்கின்றான் வடக்கு நாட்டான்,
செந்தமிழா நமைஎல்லாம். இக்கூட் டத்தைப்
பாம்பென்று நீஉணர்க. உடனே இந்தப்
பகல்நேரத் திருடர்களை விரட்டு என்பார்.

அணில்முதுகு முக்கோடுச் சைவர்; ஆற்று
அரங்கத்து எம்பெருமான் கருங்கல் காலில்,
மணிக்கணக்கி லேவீழ்ந்து வணங்கும் பக்தி
மான்களெலாம், இவர்நூலைத், துன்பஞ் செய்யும்
பிணியென்பர். இப்பேச்சைக் கவிஞர் கேட்டால்,
பேயர்களே! மேடையிதோ; நானும் வந்தேன்;
துணிவுண்டா வாதமிட? எங்கே? என்று
சுயமரியா தைக்கேள்வி ஆரம் பிப்பார்.

திருடுதற்கு நிலைமைதனை ஏற்ப டுத்தும்,
திருத்தாச் சட்டங்கள்; நொந்தும் வெந்தும்,
நுரையற்ற கண்ணீரைச் சிந்திச் சிந்தி
நிலந்தன்னை நனைப்பவர்கள்; இதைத் தொடர்ந்து
நெருக்கடிகள், இவ்வளவும் இருத்தல் கண்டு,
நெற்கதிரை அறுக்கின்ற தமிழா, இன்று
இருட்டறையில் உள்ளதடா உலகம் – என்று
எவன்சொன்னான் இவரைப்போல் இந்த நாட்டில்?

பதர்கலந்த செந்நெல்லைப் புடைத்தல் போலப்
பைந்தமிழில் படிந்துள்ள பிறர்சொல் போக்கிப்
புதுவளர்ச்சி தருவதிலும்; பிறந்த நாட்டில்
புரட்சிதனை வளர்ப்பதிலும்; புதிய பூவின்
மதுபோன்ற கவியெழுதி, மாந்தர் தம்மை
வசமாக்கிக் கொள்வதிலும் இவரைப் போல
இதுவரைக்கும் கவிமனிதன் பிறந்ததில்லை,
இந்தஇரு பத்துநூற் றாண்டு தன்னில்!

மங்கலச்சொல் வைத்தெழுதும் வழக்கம் எல்லாம்
மலையேறிப் போயிற்றாம். ஆமாம். மாசம்,
திங்களென மாறட்டும். இதுதான் வேண்டும்.
தெளிவாகச் சொல்வதெனில், வடசொல் வேண்டாம்!
கங்கைமனம் நம்மவர்க்கு எதற்கு? நாமோ
காவிரியின் நினைப்பாளர்– என்றுகூற
இங்கொருத்தர் இருக்கின்றார் என்றால், அந்த
இரணியனின் வாழையடி இவர்தான் கண்டீர்!

ஊர்ஊராய் ஏடுகளைத் தேடி, ஏட்டின்
உட்புறத்தில் பதம்மாற்றி, ஆரி யத்தை
வேர்ஊன்ற வைத்து,மொழி மோசம் செய்த
விடப்பாம்பு மனிதர்க்கும்; வஞ்ச கர்க்கும்;
நீர்ஓசை வருகின்ற கடலின் ஓரம்
நீண்டகருங் கற்சிலைகள்! நம்மொ ழிக்கு,
சீர்தந்த இவருக்கோ, இன்னும் நாட்டில்,
சிலைஇல்லை. இது நமக்கு மிகவும் வெட்கம்!

*இதழ்: முரசொலி – 22–4–1955*



# நாட்டைக் காப்போம்!

நம்முடைய சுதந்திரத்திற்குப் பிறகு அந்நிய நாட்டின் மீது வலுவில் நாம் போருக்குச் சென்றதாக வரலாறில்லை.

நாடு பிடிக்கும் நப்பாசையோ-பிறர் நாட்டைச் சுருட்டிக் கொண்டு பேரின்ப வாழ்க்கை நடத்தும் எண்ணமோ எந்நாளும் நமக்கிருந்ததில்லை!

ஆனால்! நம்மிடமிருந்து பிரிந்து சென்ற பாகிஸ்தான் இந்தப் பதினெட்டு ஆண்டுகளில் காஷ்மீர் பிரச்சினையை வைத்துக் கொண்டு, நமக்கு கொடுத்திருக்கும் தொல்லைகள் எத்தனை? அழித்திருக்கும் ஊர்கள் எத்தனை? கொன்றிருக்கும் உயிர்கள் எத்தனை? அத்தனையும் சொல்லி முடியுமோ அந்தச் சோகக் கதைகளை?

இத்தனையும் செய்தது போதாதென்று, இன்று சிறுகச் சிறுக இராணுவத்தினரை நம் நாட்டுக்குள் ஊடுருவிச் செல்ல உத்தரவிட்டிருக்கும் நிலையைப் பார்க்கும் போது- பாகிஸ்தான் திட்டமிட்டே யுத்தத்தில் இறங்கியிருப்பது நன்றாகத் தெரிகிறது!

இனியும் பொறுத்தல் ஏமாளிகளின் செயலாகும் என்பதை உணர்ந்து விட்ட இந்திய அரசு- பகையினைத் தடுத்து நிறுத்த மேற்கொண்டுள்ள முறைகள் மிகவும் போற்றத்தக்கதாகும்!

நாம் இவ்வளவு பெரிய நாட்டுக்குச் சொந்தக்காரராய் இருந்தும்- நம்முடைய அடக்கம் அண்டை நாடுகளுக்கு இதுவரை கேலிப் பொருளாகவே இருந்து வந்துள்ளது- நம்முடைய பொறுமை அவர்களுக்குப் பலமின்மையென கருதத் தூண்டியுள்ளது!

ஆனால், அந்த ஏமாளிகள் இன்று இந்தியாவின் விஸ்வருபத்தை அறிந்திருப்பார்கள் என்பது உறுதி!

பாகிஸ்தான், இந்தியாவின் மீது ஆக்கிரமிப்பு நடத்தியிருக்கும் இந்த நேரத்தில் எந்த நாடாவது பாகிஸ்தானுக்கு ஆயுத உதவியோ-ஆள் உதவியோ செய்யுமானால் அதையும் இந்தியா பகை நாடாகவே கருதும்! என்னும் இந்தியாவின் திட்டவட்டமான அறிவிப்பு. அண்டைநாடுகளுக்கு ஒரு எச்சரிக்கையாகும்!

பகை யெங்கே? அதன் தொகை யெங்கே? என்ற கேள்வியோடு தேடியலையும் நம் வீரருக்குப் பின் நின்று- எல்லாவித உதவிகளையும் செய்ய இந்நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் வீர சபதமேற்போம்!

வெற்றிப் பாதை நோக்கி வீர நடைபோடும் நம் வீரருக்கு நம் இதயங்கனிந்த வாழ்த்துக்கள்!

பகை யெங்கே? அதன் தொகை யெங்கே? என்கிற கேள்வியோடு வீற்றிருக்கும் வீரரே இந்த இதழின் முகப்பை அலங்கரிக்கிறார்!

அறம் வெல்லட்டும்!

அநீதி அழியட்டும்!

*இதழ்: விண்மீன் – 15–9–1965*

## அமைதியில் பிறந்த வெற்றி!

தூங்கும் புலியை இடறிவிட்ட குற்றச்சாட்டை நடுநிலையாளர்கள், நல்லவர்கள், அறம் உணர்ந்தோர், மனிதப் பண்புகொண்டோர் அனைவருமே அதிபர் அயூப்கான் மீது சுமத்த முன்வந்துள்ள இந்த நேரத்திலும்- பாகிஸ்தானின் சர்வாதிகாரி இந்த அடாத செயலை மட்டும் செய்யவில்லையென்றால் நமது வலிமை, நேர்மை உணரப்படாமல் போயிருக்குமே-

-என்ற காரணத்தால் மிருக உணர்ச்சியை அரசியலிலும் அதைவிட நாட்டின் இயக்கத்துக்கும் கடைப்பிடிக்கும் அந்த அதிசயப் பிறவிக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வோம்!

'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்ற வாக்கு இதை விட பிறிதொரு சந்தர்ப்பத்தில் முழுமையாக உணரப்பட்டிருக்காது என்றே கருதுகிறோம்.

இந்தியாவின் "கூட்டுசேரா"க் கொள்கையை நட்பின் இலக்கணம் தெரியாத போக்கு என்றனர்.

இந்தியாவின் "அஹிம்சை"க் கொள்கையை கோழைத்தனம் என்று விளித்தனர்.

இந்தியாவின் "உலக அமைதி"க் கொள்கையை வீரம் இல்லாத போக்கு என்று கேலிப்புன்னகை புரிந்தனர்.

ஆனால் இந்தியா மண்ணையும் மானத்தையும் விலையாகக் கொடுத்து இந்த மூன்று கொள்கைகளையும் கடைப்பிடிக்கவோ

பாதுகாக்கவோ விரும்பவில்லை என்பதை அரசியலில் அவசரப் புத்தி படைத்தோர் மிகக் குறுகிய காலத்தில் புரிந்து கொண்டனர். லாகூர், சியால்கோட், காசூர் இப்படி வீரம் விளைவித்தனர் நம் மறவர்கள்; மூக்கின்மேல் விரலை வைத்தனர் மாற்றாரும் மற்றையோரும்.

இராணுவ நட்பு எங்கே? நேட்டே எங்கே? சியாட்டோ எங்கே? பாதுகாப்பு உடன்படிக்கைகள் எங்கே? முன்னோடி நாடுகள் தந்த நவீன படை பலம் எங்கே?

-இவையனைத்தும் நமது வெற்றி வாகையின் முன் தோல்வித் துகள்களாக மாறி நம் காலடி வந்து வீழ்ந்துள்ளது.

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலுமுள்ள இராணுவ நிபுணர்கள் இந்தியப் படையினரின் வலிமையை எண்ணி வியப்பதாக அங்குள்ள வாஷிங்டன் போஸ்ட்டும் கார்டியன் பத்திரிகைகளும் எழுதியுள்ளன.

இங்கு எழுந்த ஒற்றுமைக் கரத்தின் வலிவை உலகம் உள்ளளவும் மக்கள் மறக்க முடியாது.

கட்சிகள் காட்டிய ஒத்துழைப்பு அரசியல் இலக்கணத்தின் ஒரு அத்தியாயமாக சேர்க்கப்படவேண்டிய ஒன்றாகும்.

நாம் மண்ணை மட்டும் காப்பாற்றிக் கொள்ளவில்லை மேலாக நமது மானத்தையும் காத்திருக்கிறோம். கொண்ட கொள்கையின் உறுதியையும் வலிமைப்படுத்தியுள்ளோம்.

எனவேதான் வெற்றியில் இரட்டிப்பு மகிழ்வு பிறக்கிறது.

-ஆனால் அதைக் கொண்டாடும் நாள் இன்னும் சற்று தொலைவில் உள்ளது.

கடமைகள் இன்னும் உள்ளன; இடையில் பெற்ற வெற்றியின் தொடர்ச்சியாக இன்னும் சாதிக்க வேண்டியவைகள் பல இருக்கின்றன.

எனவே பயணத்தைத் தொடர்வோம்!

*இதழ்: விண்மீன் – 1–10–1965*

## பேரறிஞர் வாழ்க!

கடல் மூன்றெழுத்தை தன் பெயராக வைத்துக் கொண்டுதான்- உலகம் விரும்பும் முத்துக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

வானம் மூன்றெழுத்தை தன் பெயராக வைத்துக் கொண்டுதான் பகலில் ஒளிதர கதிரவனையும்- இரவில் வெண்ணிலவையும் மற்றும் எண்ணற்ற விண்மீன்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது!

நிலம் மூன்றெழுத்தை தன் பெயராக வைத்துக் கொண்டுதான் இவ்வுலகில் வாழும் உயிர்கள் உண்டு மகிழ உணவுப் பொருள்களை வழங்கிக் கொண்டிருக்கிறது!

கடல்-வானம்-நிலம் இம்மூன்றும் அடங்கியது தான் இந்த உலகம்.

உலகின் கூறுபாடுகள் எவ்விதம் மூன்றெழுத்துக்களால் பெயர்பெற்று இவ்வுலகை உய்விக்கின்றனவோ- அவ்விதமே தமிழ் என்கின்ற மூன்றெழுத்தை - தமிழரின் கருவூலத்தைக் கட்டிக் காப்பாற்றிக் கொண்டு வருகிறது ஒரு மூன்றெழுத்து

அதுதான் அண்ணா என்கின்ற மூன்றெழுத்து?

தமிழருக்கெல்லாம் தலைவராய் வீற்றிருக்கும் அந்த அண்ணல் இன்று பிறந்த நாள்!

குலத்தலைவன் பிறந்தநாளை இன்று கொண்டாடத் துடிக்கிறது நெஞ்சம்- என்றாலும் போர்க்குரல் எழுப்பிவரும் அண்டை நாட்டானைக் கண்டு வெடிக்கிறது உள்ளம்!

அண்ணனின் கட்டளையும் அதுதான்:-

"விழா வேண்டாம் எனக்கு வீறு கொண்டு கிளம்புங்கள் பகைமுகம் நோக்கி!"

“பாடல் வேண்டாம் எனக்கு அதுவே இன்று ஆர்ப்பாட்டக் காரர்களை யடக்க- போர்ப் பாட்டாக மாறட்டும் எங்கும்!”

“கொண்டாட்டம் தேவையில்லை - நாட்டை கொண்டு போக நினைப்பவர்களை நிர்மூலமாக்குவோம்!"


பேரறிஞர் உதிர்த்திட்ட முத்துக்கள் இவை- . அவை முழுப்பயனையடைய முயற்சிப்போம்!

அண்ணாவின் ஐம்பத்தேழாவது ஆண்டு நிறைவுபெறும் இந்நாள்- நமக்கெல்லாம் இன்பநாள்; அன்னவரின் திருநாளை பெருநாளாய்க் கொண்டாடாவிட்டாலும்-நம் உளமார வாழ்த்தி உவகை பூக்கின்றோம்- உணர்ச்சி பெறுகின்றோம்!

வாழ்க பேரறிஞர் அண்ணா!

*இதழ்: விண்மீன் – 1–9–1966*





என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி அறிவின் ஆக்கம்!
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி தேனின் தேக்கம்!
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி எனக்குத் தாய்ப்பால்!
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி புகழின் போர்வை!

